மாலைமணி

ஆசிரியர் : பி.எஸ்.இளங்கோ

போர் முழக்கமிடும் இலட்சிய வீரர்!

மாலைமணி
ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 2 | 4-9-60 | ஒலி 44

இந்தி வந்தே தீரும்!

நமது நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம்—சென்னை மேல் சட்டசபையில், சென்னை அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைப் பற்றி ஒரு பிரேரணையைக் கொண்டு வந்து, அதை நிறைவேற்றியும் வைத்திருக்கிறார்!

"ஆங்கில மொழி நீடிக்கும் என்ற பிரதமரின் வாக்குறுதியை சட்டத்தின் வாயிலாக நடவடிக்கை எடுக்க மத்திய சர்க்கார் சட்டமியற்ற வேண்டும்" என்று திருவாளர் ரஸாகான் அவர்கள் கொண்டு வந்த திருத்தமும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது!

இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்த திருவாளர் ரஸாகான் அவர்களையும், இந்தத் திருத்தத்தை ஒப்புக் கொண்ட நமது நிதி அமைச்சரையும் நாம், மனமகிழ்ச்சியோடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்!

நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம் மிக்க தமிழ்ப் பற்றோடு பேசி இருக்கிறார்! தமிழ் மொழி மீது மிகக பாசம் வைத்தே பேசி இருக்கிறார்! அவருக்குள்ள பற்றை, பாசத்தை நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது!

அவர் எப்படித்தான் தமிழ்ப் பற்றோடு பேசினாலும், அவர் எப்படித்தான் தமிழ் மொழி மீது பாசம் வைத்திருந்தாலும் முடிவில் டெல்லியில் தான் சரணாகதியடைகிறார்!

"இந்தி வராது, இந்தி நிச்சயமாக வராது, இந்தி எந்த காலத்திலுமே வராது, இந்தித் திணிப்பு என்பது இடையவே இடையாது' என்றெல்லாம் முழக்கமிட்டு வந்தவர்—இன்று தெளிவாகக் கூறி விட்டார்! 'இந்தி வரத்தான் செய்யும், இந்தி வந்துதானாகும்" என்று மிக்க விளக்கமாகச் சொல்லிவிட்டார்!

"இந்தி திணிப்பு என்பதே இல்லை. ஆனால் 1965-ம் ஆண்டிற்குப் பின்பும் இந்தியை படிக்கவே கூடாது என்பதை ஏற்க முடியாது!" என்று மிக்க தெளிவாக மேல் சட்டசபையில் எடுத்துரைத்திருக்கிறார்!

நமது நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம் அவர்கள் சென்னை மேல் சட்ட சபையில் பேசிய பேச்சை, ஒரு முறையல்ல பலமுறைப் படித்தோம்! ஊன்றி, ஊன்றிப் படித்தோம்! கவனித்து கவனித்துப் படித்தோம்! அப்படியே சோர்ந்து உட்கார்ந்து விட்டோம்!

"இந்தியா ஒரே நாடு, அந்த ஒரே இந்தியாவிற்கு, ஒரே ஒரு மொழிதான் வேண்டும்—அந்த ஒரே ஒருமொழி இந்தி மொழிதான்" என்பதை சுற்றி வளைத்துக் கூறி விட்டார்!

அவரைப் போல் நாமும் இனி சுற்றி வளைத்துப் பேசுவதில் கொஞ்சமும் பயனில்லை! சுருக்கமாகச் சொன்னால் இந்திதான் ஆட்சிமொழி! அது வந்தேதான் தீரும்! இதில் துளியும் நாம் சந்தேகப்படத் தேவையில்லை!

நாம், விரைவாக, ஏதாவது ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும்! இந்தியைக் கற்றுக் கொண்டு, கால முழுவதும் டெல்லியோடு பிணைக்கப்பட்டு அடிமையாகவே கிடக்க வேண்டும்! அல்லது டெல்லியின் அடிமைத் தளையை உடைத்தெறிந்து விட்டு நாட்டை மீட்டு நல்வாழ்வு பெறவேண்டும்! தென்னகத்து மக்கள் இதில் எதை விரும்புகின்றனர்!

காலத்தைக் கடத்துவதால் இனி பயனில்லை! காலம் கடப்பதால் நமக்கு ஏதும் லாபமுமில்லை! காலம் கடக்க, கடக்க அவர்களுக்குத் தான் லாபமே தவிர நமக்கு ஒரு துளியும் லாபமில்லை!

ஆங்கிலம் காலவரையின்றி நீடிக்கும் என்கிறார்கள்—அதற்காக மகிழ்ச்சி!

ஆங்கிலம் நீடிக்க சட்டத்தைக் கூட திருத்துவதாகச் சொல்லுகிறார்கள்! மெத்த சந்தோஷம், மெத்த சந்தோஷம்!

ஆங்கிலம் நீடிப்பது, அதற்குச் சட்டத்தின் வாயிலாக வகை செய்து கொள்வது நம்மைக் காட்டிலும் அவர்களுக்கே பெருத்த லாபமாகும்!

தவணை தருவதும், தள்ளிப் போடுவதும் நமக்காக அல்ல—அவர்களுடைய வசதிகளுக்காகத்தான் தள்ளிப் போடுகின்றனர், தவணை தருகின்றனர்!

இன்றைய தினம் இந்தி மொழியை வைத்துக் கொண்டு எந்த நிர்வாகத்தையும் நடத்த முடியாது! இந்தி மொழி அதற்கேற்றதல்ல, தகுதி பெற்றதுமல்ல!

இந்தி மொழிக்கு தகுதியும், திறமையும் ஏற்படும் வரையில் ஆங்கிலம் நீடித்தால்தான் ஆட்சி நடைபெறும்! ஆங்கில மொழியின் துணையை நாடாமல் இந்தி மொழியை மட்டும் வைத்துக் கொண்டு ஒரு சாதாரண பஞ்சாயதது சபையைக கூட நிர்வகிக்க முடியாது!

எனவேதான் ஆங்கிலம் நீடிக்கும், ஆங்கிலம் நீடிக்கும் என்கிறார்கள்! ஆங்கிலத்தை நீடிக்கவைப்பது நமக்காக அல்ல—நமககாக அல்லவே அல்ல!

ஆங்கிலத்தை நாளைக்கே விரட்டியடித்து விட்டால், ஒரு கண நேரம்கூட இந்தி மொழியால் ஆட்சியை நடத்த முடியாது!

சொந்த லாபத்தைக் கருதிதான் நம்மீது பரிவு காட்டுகிறார்கள்! "ஆங்கிலம் நீடிக்கும், ஆங்கிலம் நீடிக்கும் அஞ்சாதீர்கள்" என்று உறுதிமொழியளிக்கின்றனர்!

இந்த மயக்குமொழிகளில் நாம் மயங்கிவிட்டால் நாம் என்றுமே வாழ முடியாது!

நம்முடைய தலைவிதி என்ன? அது உடனடியாக நிர்ணயிககப்பட வேண்டும்!

நமது நிதி அமைச்சரும், நமது நிதி அமைச்சரைச் சார்ந்த அவருடைய சகாக்களும் அகில இந்தியாவைச் சார்ந்தவர்கள்! ஏக பாரத மாதாவின் தவப் புதல்வர்கள்! எனவே அவர்கள் அகில இந்திய ரீதியில் ஒரு தேசிய மொழியை, ஒரு பொதுமொழியை ஒரு நிர்வாக மொழியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு விட்டனர்! அது இந்தி மொழிதான் என்றும் சொல்லி விட்டனர்!

நாம் தனி இனத்தவர், தனிநாடு கேட்பவர்கள்! தமிழ் இனம் தனி இனம் தமிழ்நாடு, திராவிடநாடு தனி கலாச்சாரத்தைக் கொண்ட, தனி பண்பாட்டைக் கொண்ட, தனி நாகரீகத்தைக் கொண்ட தனி மொழியைக் கொண்ட நாடு என்று வரலாற்றுச் சுவடிகளின் மூலம் அறிந்து கொண்டவர்கள்! எனவே நாம் இந்தி மொழியை எந்தக் காலத்திலும் ஏற்க முடியாது! அது எந்தக காலத்திலும் நமக்கு பொது மொழியாகவும் வர முடியாது! நம்முடைய நாட்டிற்கு நாம் ஒரு தேசிய மொழியை, ஒரு பொதுமொழியை ஒரு நிர்வாக மொழியை, தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்!

அப்படி என்றால் என்ன பொருள் என்று கேட்பீர்கள்! அப்படி என்றால்—தென்னாட்டில் தனிக கொடியை நாட்டு என்று பொருள்! அப்படி என்றால் தென்னாட்டில் விடுதலை முழக்கத்தை கிளப்பு என்று அர்த்தம்! அப்படி என்றால் வடவரின் அடிமைத் தளையை உடைத்தெறி என்று பொருள்!

ஆமாம், வீரர்களே! இந்தியை விரட்ட ஒரே ஒரு வழி விடுதலைதான்! திராவிடத்தை விடுவிக்க, தென்னகத்தை மீட்க உடனடியாகக் கிளம்புங்கள்! காலம் கடத்துவோமானால் இந்தி வந்தே தீரும்! அதில் துளியும் சந்தேகமில்லை!

காங்கிரஸ் தமிழர்களே, திராவிடர்களே! என்ன செய்யப் போகின்றீர்கள்! இந்தியை பொதுமொழியாக ஏற்றுக் கொண்டு வடநாட்டு நாகரீகத்தையும், கலாச்சாரத்தையும் பின்பற்றி அடிமையாக வாழப் போகிறீர்களா? அல்லது உங்கள் சொந்த நாகரீகத்தோடு தலைநிமிர்ந்து வாழப் போகிறீர்களா? இதில் இரண்டில் ஒன்றை விரைவாக முடிவு செய்து கொள்ளுங்கள்!

கம்யூனிஸ்டு தமிழர்களே, திராவிடர்களே! உங்களுடைய நிலை என்ன? இப்போதே தெளிவாகச் சொல்லி விடுங்கள்!

சோஷலிஸ்டு தமிழர்களே! திராவிடர்களே! உங்களுடைய உள்ளக் கிடக்கை என்ன? உறுதியாக எதையாவது ஒன்றை சொல்லிவிடுங்கள்!

திராவிட முன்னேற்றக் கழகத்து தமிழர்களே! திராவிடர்களே! யாரை நம்பியும் பயனில்லை! புறப்படுங்கள்! நமது மாபெரும் தலைவர் அண்ணாவின் கட்டளையை ஏற்று உடனடியாகப் புறப்படுங்கள்! புறப்படும் நீங்கள் விடுதலைக் கொடியை நாட்டிவிட்டுத் திரும்புங்கள்...இல்லையேல் செத்து மடியுங்கள்! நீங்கள் செத்து மடியாவிட்டால் இந்தி வந்தே தீரும! இது உறுதி!

டெல்லி ஏகாதிபத்தியம் நம்மை புறக்கணித்துக் கொண்டே வருகிறது!

இதை தென்னாட்டு மக்கள் புரிந்துகொண்டு விட்டனர்!

தூத்துக்குடித் திட்டம் எங்கே? மங்களூர் என்னவாயிற்று?

இவைகளெல்லாம் தேர்தல் காலத்துத் திட்டங்களா?

இந்த அவமதிப்பைத் தென்னகம் தாங்காது!

ஒருநாளும் தாங்காது!

உரிமை கிடைக்க போராட்டம்தான் வழி என்றால் அந்த போராட்டமும் நடைபெறும்!

டெல்லி வெறியர்களுக்கு சம்பத் கொடுக்கும் எச்சரிக்கை!

நமது சம்பத் அவர்கள், டெல்லி மக்கள் சபையில் டெல்லி ஏகாதிபத்திய வெறியர்களுக்கு நீண்டதோர் அறிவுரையை வழங்கி எச்சரிக்கை விடுத்திருக்கிறார். "தென்னகம் தொடர்ந்து புறக்கணிக்கப்படுமானால் அதன் விளைவை நிச்சயமாக அனுபவிக்க நேரிடும்" என்றும் அவர் கர்ஜித்திருக்கிறார்!

இதுவரையில் சம்பத் அவர்கள் பேச எழுந்தால் "உட்காரு, உட்காரு பேசாதே பேசாதே" என்று கூச்சல் போட்டவர்களெல்லாம் அப்படியே திகைத்துப்போனார்கள்! திகைத்துப் போனார்கள் என்பதைவிட நடுநடுங்கிப் போனார்கள் என்பதே பொருத்தமாகும்! அவரது சிம்மக் குரல், அந்த சிம்மக் குரலில் கலந்திருக்கும் பெரும் உணர்ச்சிப் பிரவாகம் எல்லாம் சேர்ந்து அவர்களுக்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்திருக்கிறது! அலட்சியம் செய்தவர்களெல்லாம், அவருடைய அறிவுரையை, எச்சரிக்கையை கன்னத்தில் கை வைத்துக்கொண்டே, கவலை தோய்ந்த முகத்தோடு சம்பத் அவர்களை உற்று நோக்கிய வண்ணம் கேட்டுக்கொண்டிருந்தார்களாம்! "இந்த உணர்ச்சி எங்கு கொண்டு போய் விடுமோ" என்ற கவலை அவர்களுடைய உள்ளத்திலே நிச்சயமாக அலை பாயத்தான் செய்திருக்கும்! டெல்லிக்கோமான்களை நிலை குலைய வைத்திருக்கும் சம்பத்தின் சூறாவளிப் பேச்சை அப்படியே தருகிறோம்.

"மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றி பிரதமர் நேரு அவர்கள் நேற்று மிக விரிவாகப் பேசியபோது, அவர், திட்ட நகலில் கண்டுள்ள பல்வேறு திட்டங்கள் பற்றி எதுவும் குறிப்பிடாதது எங்களுக்குப் பெரும் ஏமாற்றமாகவே இருந்தது. திட்டத்தை எவ்விதமாக அணுகுவது, அந்த அணுகும் முறையில் உள்ள இடர்ப்பாடுகள் ஆகியவைபற்றிக் குறிப்பிடுவதற்கே அவர் மிகப் பொன்னான நேரத்தில் 70 நிமிடங்களை விழுங்கி விட்டார். ஆனால், ஒரு வகையில், ஒரு உண்மையை அவர் உணர்ந்து கொண்டிருக்கிறார் என்பதறிய மகிழ்ச்சிதான், அதாவது தக்க சூழ்நிலையும் சுற்றுச் சார்பும் உருவாக்கப்பட்டாலன்றி, எந்த ஒரு திட்டத்தின் வெற்றியும் சந்தேகத்திற்குரியதே என்ற என்ற உண்மைதான் அது.

"ஆனால், அதில்கூட, இந்த அம்சத்தினை, அவர் நாங்கள் எல்லாம் எதிர்பார்த்த அளவு முழுமையாக விவாதிக்கவில்லை. மொழிப் பிரசினைகள், மற்றும் இதர பிரச்சினைகளில் அற்பச் சண்டையிட்டுக் கொண்டு நமது ஆற்றலை எல்லாம் வீணடித்து, திட்டத்திற்கான சூழ்நிலையை உருவாக்குவதில் நாம் தவறிவிட்டதாக அவர் மிகக் கவலைப்பட்டார். ஆனால் இந்தப் பிரச்சினைகளை எல்லாம் இங்கே அமர்ந்து கொண்டு, 'எல்லாம் அற்பத்தனமான விவகாரங்கள்' என்று சொல்லிவிடுவது மிகச் சுலபம். குழப்பங்களை உண்டாக்குவதற்கு இங்கு அதிகாரம் தாங்கி, வீற்றிருக்கும் பலர் எவ்வளவு தூரம் பொறுப்பாளிகள் என்ற உண்மையையும் அவர், உணர்ந்து இங்கு பேசியிருக்க வேண்டும்.

"இந்தியைத் தென்னாட்டின் மீது திணிப்பதற்கெதிரான மிகக் கடுமையான உணர்ச்சிகள் பற்றியும், மொழிப் பிரச்சினை பற்றியும், இந்தச் சபையிலும், இந்தியாவின் இந்தப் பகுதியிலும் எவ்வளவோ குழப்பங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. நான் சார்ந்திருக்கிற கட்சியைப் பற்றி இங்கு, வேண்டுமென்றே எவ்வளவோ குழப்பங்கள் உருவாக்க முயற்சிக்கப்படுகின்றது. நான் அந்த நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கும் கட்சிக்காரன் என்றாலும், இந்தச் சபையில் ஒரு உறுப்பினன் என்ற முறையில் பல்வேறு பிரச்சினைகளையும் பற்றித் தென்னாட்டு மக்கள் என்ன கருதுகிறார்கள் என்பதை இங்கு எடுத்துரைக்க வேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

"அந்தக் கருத்துக்கள் எல்லாம், இங்கே வீற்றிருக்கிறெ

(அடுத்த பக்கம் பார்க்க)

அரசியல் நெருக்கடி ஏற்பட்டால் இனிக்க இனிக்க பேசுகிறார்கள்! உறுதிமொழி தருகிறார்கள்!

நெருக்கடி தீர்ந்துவிட்டால் எல்லாம் காற்றில் பறந்து விடுகின்றன!

இதுபோன்ற அற்பத்தன தந்திரங்களால் இனி எங்களை ஏமாற்றமுடியாது!

(சம்பத் பேச்சு தொடர்ச்சி)

அமைச்சர்களுக்கு அவ்வளவு முக்கியமானதாகத் தென்படாமலிருக்கலாம். ஆனால் எங்கள் பெருமை எங்கள் வாழ்வு நாங்கள் வாழ்வில் மதிக்கத் தக்கன என்று கருதுபவை முதலிய எல்லாவற்றையும் படுமோசமாக பாதிக்கக் கூடியபல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன.

"நான் ஒரு உண்மையை குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். வெள்ளையராட்சி இருந்த நாட்களிலேயே தென்னாடு பல வகைகளிலும் புறக்கணிக்கப்பட்டிருந்ததது. ஆனால் சுதந்திரம் வந்து 13 ஆண்டுகளான பின்பும் நாங்கள் காணுவது என்ன? தொடர்ந்து தென்னாடு புறக்கணிக்கப்படுவதைத் தானே காணுகிறோம்?

"இந்த நிலையை, தென்னக மக்கள், வாய் மூடிக் கிடந்து அமைதியாக சகித்துக்கொள்ளுவது எப்படி முடியும்? அவர்கள் போராடத்தான் செய்வார்கள்; அவர்கள் போராடத்தான் வேண்டும்; தங்கள் கோரிக்கைகளை உறுதியோடு ஆவேசமாகச் சொல்லத்தான் வேண்டியிருக்கிறது.

"அவர்கள் தங்கள் கோரிக்கைகளை பலத்தோடு எடுத்துரைக்கும்போது, இங்கே மிக உயரத்தில் — டெல்லியில் உட்கார்ந்திருப்பவர்களுக்குக் கேட்கிற மொழியில் எடுத்துரைக்கும்போது, எவரும் அதனை 'மாகாணப் பித்து' பிரதேச வெறி, குறுகிய மனப்போக்கு, என்று கூறிவிட முடியாது, இங்கே உள்ளவர்கள் உருவாக்குகிற கொள்கைகளில் பிரதிபலிக்கிற 'சின்ன புத்தி' தானே இந்தக் கொள்கைகளினால் பாதிக்கப்படுகிற மக்களிடத்திலும் எதிரொலிக்கும்? இதை அனைவரும் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். எது பற்றியும் எனக்குத் தெரியாது என்று சொல்லிவிட்டு, தங்களுக்கு இழைக்கப்படுகிற அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுத்துக் கிளர்ந்தெழும் மக்களைக் குறை சொல்லிப் பயனில்லை.

"இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன்; இந்தியத் துணைக்கண்டம் பெற்றுள்ள பெருமையில் —வடநாட்டைவிட மேலானதாயில்லாவிட்டாலும் —தென்னாட்டின் பங்கு எந்தவகையிலும் கீழானது அல்ல; அத்தகைய தென்னாடு இனியும், இதுகாறும் நடத்தப்பட்டதுபோல நடத்தப்பட முடியாது. திட்டத்தைப் பொறுத்தும், இதர உயிர்ப் பிரச்சினைகள் பலவற்றைப் பொறுத்தும், தங்கள் நாடு புறக்கணிக்கப்பட்டிருப்பதாகத் தென்னக மக்கள் கருதுகிறார்கள். இந்த உணர்ச்சியை எவரும் அலட்சியப்படுத்தக்கூடாது.

"தூத்துக்குடி, மங்களூர் துறைமுகங்களை எல்லாப் பருவக் காலங்களிலும் பயன்படக் கூடியனவாய் அபிவிருத்தி செய்யும் திட்டம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெறும்—என்று டெல்லியிலும், சென்னையிலும் உள்ள அமைச்சர்கள் ஒருவர் பின் ஒருவராக உறுதியளித்தபோது தென்னக மக்கள் மகிழ்ந்தனர்; ஆனால் மூன்றும் திட்டத்தில் தூத்துக்குடி மங்களூர் இல்லை என்பதை கண்டதும் துடித்துப் போனார்கள். இந்த உறுதிமொழி காங்கிரசுக் கட்சிக்குத் தூத்துக்குடியில் ஒரு பொதுத் தேர்தலிலும், இரண்டு இடைத் தேர்தல்களிலும் வெற்றியைப் பெற்றுத் தந்தது தேர்தல் நடைபெறவிருந்தபோது, இடைப்பட்ட ஆர்ப்பாட்டம் மிகுந்த நாட்களில், நமது போக்குவரத்துத் துறை அமைச்சர், 'தூத்துக்குடிக்குத் துறைமுக அபிவிருத்தித்திட்டம் வருகிறது' என்ற உறுதியைத் தருவதற்காக விசேட விமானம் மூலம் அழைத்து வரப்பட்டார்..."

தோழர் முகம்மது இமாம் (சித்தல துருகம், மைசூர்):— "அடுத்த தேர்தலின் போதும் இந்த வாக்குறுதியைத் திரும்பவும் கூறுவார்கள்."

தோழர் சம்பத்:— "இமாம் அவர்கள் கூறுவதுபோல, உறுதி மொழியைத் திரும்பவும் தருவார்கள்; ஆனால், அதனை நிறைவேற்ற மட்டும் மாட்டார்கள்; ஏனெனில் ஒவ்வொரு முறையும் அவ்விதம் உறுதி மொழி தந்தபோது எல்லாம் காங்கிரசிற்கு ஓட்டு போடாவிட்டால் திட்டம் கிடையாது. என்ற அச்சுறுத்தி வந்திருக்கிறார்கள். இத்தகைய அற்பத்தனமான அரசியல் தந்திரங்களை, திட்டம், நாட்டின முன்னேற்றம் இவற்றோடு சேர்த்து குழப்பப்படக் கூடாது.

"அணு மின்சார நிலையத்தை பொறுத்து. தமிழ் நாட்டில் தான் அது அமையும்' என்ற

(9-ம் பக்கம் பார்க்க)

மனங் கலங்கா மாவீரன்! மாற்றான் அஞ்சும் மதுரைவீரன்!

"மதுரை முத்து மீண்டும் மதுரை மாவட்டத்திற்குச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்" என்ற செய்தி நமக்கெல்லாம் பெருமகிழ்ச்சியை அளிக்கிறது! மீண்டும் அவருடைய பணியைப் பெற இருக்கும் மதுரை மாவட்டமும் இதைக் கண்டு மகிழும் என்பதில் துளியும் சந்தேகமில்லை!

அரசியலில் காலித்தனங்கள் மலிந்துள்ள இந்த நேரத்தில்—அரசியல் வட்டாரங்களிலே கத்திகளும், கபடாக்களும் நடமாடுகின்ற இந்த நேரத்தில்—எதையும் தாங்கும் இதயம் படைத்த மதுரை மாவீரன், மனங் கலங்கா மதுரை முத்து பொறுப்பேற்றிருக்கிறார்! கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற ஆயுதங்களால் அவைகளை முறியடிக்கும் வல்லமை பெற்றவரை பாண்டிய நாடு தேர்ந்தெடுத்திருக்கிறது. பாராட்டுகிறோம்!

அவருக்குத் துணைச் செயலாளர் உறுதுணையாக நின்று பணிபுரிய வந்திருக்கும் கூடலூர் எஸ். ராமசாமியையும்—பொருளாளர் எஸ். முனியப்பன் அவர்களையும் நாம் பாராட்டக் கடமைபட்டிருக்கிறோம்!

மதுரை மாவட்டத்தின் சார்பாக பொதுக்குழுவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும்—எஸ். எஸ், இராஜேந்திரன், டாக்டர் அருணசலம், ஆவுடையப்பன், அனிபா, சிக்கந்தர், நாச்சிமுத்து, கோபால், மேத்தா, கருப்பண்ணன், விக்கிரமாதித்தரசன் ஆகிய பத்து பொதுக்குழு உறுப்பினர்களையும், அவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் வெங்கடசாமி அவர்களையும் பாராட்டி பணி புரிய அழைக்கிறோம்!

விடுதலைக் கொடியை உயரப் பறக்கவிட்டு திராவிடத்தின் புகழ் பரப்பும் மதுரை மாவட்டத்தையும், அந்தப் புகழுக்கும் பெருமைக்கும் காரணமாயுள்ள மதுரை முத்துவையும் மீண்டும். மீண்டும் பாராட்டி—நாட்டின் விடுதலைக்காக உங்கள் உயிரையே அர்ப்பணியுங்கள் என்று கூறி வாழ்த்தி மகிழ்கிறோம்!

டெல்லிமன்னர்கள் உதைபட்டபின்பே எதையும் செய்திருக்கிறார்கள் !

பத்தாண்டு காலச் சரித்திரம் இதைத்தான் உணர்த்துகிறது !

நாகநாடு வந்தது எப்படி ? மராட்டிய மண்டலர் வந்தது எப்படி ? ஆந்திரம் பிரிந்ததுதான் எப்படி?

இந்த முறை எங்களுக்குத் தேவையில்லை ! நேர்மையோடு கேட்கிறோம், நீதியோடு நாட்டைத் தாருங்கள் !!

சென்னையில் மனோகரன் முழக்கம் !

27—8—60ம் தேதி மாலை புதுப்பேட்டை அறிவு வளர்ச்சி மன்றத்தின் சார்பில் நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் பேசியதாவது :

அன்புள்ள தலைவர் அவர்களே ! அருமை நண்பர்களே ! வணக்கத்திற்குரிய நகரத் தந்தை அவர்களே ! தாய்மார்களே !

இன்று இந்தப் பேட்டையில் அறிவு வளர்ச்சி மன்றத்தின் சார்பில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் எனக்குப் பேசும் வாய்பபுக் கிடைத்தமைக்காக நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த மன்றத்தின் தலைவரும் இந்த மாநகரத்து மதிப்பிற்குரிய தலைவரும், என் நண்பருமான அப்துல்காதர் அவர்கள் என்னை இங்கு பேச வேண்டுமென்று வற்புறுத்தி ஒப்புதல் வாங்கிக் கொண்டார்.

இந்தப் பகுதியிலுள்ள இந்த மன்றத்தின் தலைவராக இம்மாநகராட்சி மன்றத்தின் தலைவரே இருப்பதால், இப்பகுதியின் வளர்ச்சிக்காக நீங்கள் என்னென்ன காரியங்களை செய்யவேண்டுமோ அதை இப்பொழுதே சாதித்துக் கொள்வது சாலச் சிறந்தது.

திராவிட முன்னேற்றக் கழகம் நடத்துகின்ற பொதுகூட்டங்களில் ஏராளமான மக்கள் கூடுகிறார்கள். முன்னேற்றக் கழகம் சாதித்தவைகளையும். முன்னேற்றக் கழகத்தின் பணிகளையும், கொள்கைகளையும் கேட்டு இன்புறுவதற்கு மக்கள் ஆர்வம் கொண்டுள்ளார்கள்.

முன்னேற்றக் கழகத் தலைவர்கள் சொல்லுகின்ற கருத்துக்களை கேட்பதற்கு இந்த நாட்டிலுள்ள மக்களெல்லாம் ஆர்வத்தோடு செல்வதை இந்த ஆணவம் பிடித்த ஆட்சியாளர் காண்கின்றனர்.

இன்று இந்தக் கூட்டம் ஓர் திருப்பு முனையாக இருக்கிறது. மக்கள் எவ்வளவு பெருந்திரளாக இருக்கிறார்களோ அதைவிட இரண்டு மடங்கு காக்கிச் சட்டைக்காரர்கள் காட்சியளிக்கிறார்கள். ஏன் இந்த நிலை? நம்முடைய கூட்டங்களின் கருத்துகளை மக்கள் கேட்பதைவிட போலீஸ்காரர்களும் கேட்க வேண்டுமென்ற அறிவு ஆட்சியாளருக்கும் வந்திருக்கிறதென்று நினைக்கிறேன். இந்த மன்றத்தின் செயலாளர்மன்றத்தின் ஆண்டறிக்கையைப் படிப்பதைக் கேட்டுக்கொண்டிருந்தேன். அந்தஅறிக்கையில் இந்த பகுதி மக்களின் சுகாதார நலனுக்காகவும் மற்றும் கல்வி, நடைபாதை வசதிகள் போன்ற இன்னும் பிற நலன்களை கவனித்து வருவதாகவும், காலஞ்சென்ற நகைச்சுவை மன்னர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் பெயரால் ஓர் இரவுப்பள்ளி நடத்துவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

நான் இந்த சந்தர்ப்பத்தில் செயலாளர் அவர்களுக்குஒன்று கூற ஆசைப்படுகிறேன். "உங்கள் மன்றத்தின் தலைவர், இப்பகுதியின் நகர மன்ற உறுப்பினர்—மற்றும் இம் மாநகரத்தின் தந்தையுமாவார். அவர் ஆட்சிப் பொருப்பில் இருக்கின்ற இந்த நேரத்தில் ஏமாந்துவிடாது உங்கள் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளுங்கள்".

இந்த அறிவு வளர்ச்சி மன்றம் முன்னேற்றக் கழக கொள்கைகளைத் தழுவியதாகக் கொண்டு பணி புரிந்துவருகிறது என்பதை இங்கு பேசிய நண்பர்கள் கூறினார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கிய நோக்கம் இந்த நாடு வட நாட்டுப் பிடியினின்று நீங்கி, சமுதாயம், பொருளாதாரம். இவைகளில் முன்னேற்ற மடைவதற்காக பாடுபட்டு வருகிறது. இன்று மக்கள் பகுத்தறிவுடன் வாழ்வதற்கான வகைகளைச் செய்து. அரசியலில் கண்ணியத்தையும், நாணயத்தையும் கடைப் பிடிக்கும் வகைகளை முன்னேற்றக் கழகம் செய்து வருகிறது. அதைக் கடைப் பிடித்து இந்த மன்றமும் இயங்கி வருகிறது.

நான் இந்தக் கூட்டத்திற்கு வரும்போது, ஒருநண்பர் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டேன் அந்த நண்பர் இந்த ஆணவம் கொண்ட அதிகாரத்திலுள்ள காங்கிரஸ்காரர்களின் அராஜகத் தன்மையை ஆவேசத்துடனும் உணர்ச்சியுடனும்.உள்ளக் குமுறலுடனும் எடுத்துக் கூறினார்.

இன்று அரசியலில் காலித்தனங்களும் கயமைத்தனங்களும் நாடெங்கிலும் தலைவிரித்தாடுகிறது. காலிகளும் ரௌடிகளும், கூலி வாங்கிக் கொண்டு கூட்டத்தைக் கலைப்பதும், கல்லெறிவதும், பட்டாக் கத்தியை கையிலேந்திக் கொண்டு பலாத்கார முறையை கடைப்பிடித்து வருவதும்தான் இன்றைய அரசியலாகி விட்டது.

கூட்டத்தில் கலகம் விளைப்பதும், கல்லெறிவதும் உங்கட்கு மட்டும் சொந்தமல்ல—உங்கள் கையிலிருக்கும் கத்தி எங்கள் கைக்கு மாறினால் உங்கள் கதி என்ன ? ஆனால் அதைக் கடைப் பிடிப்பது எங்கள் அரசியல் நாகரீகமல்ல — நாங்கள் அரசியலில், கண்ணியத்தையும் நாகரீகத்தையும்|விரும்புகிறோம்.

சமீபத்தில் ஒரு திடுக்கிடும் செய்தியைக் கேட்டிருப்பீர்கள். குடந்தை நகரின் வீதியில் கொள்கை வீரன் ஒருவன் செங்குருதி சிந்தி செத்து மடிந்தான்.

குடந்தை இராமலிங்கத்தின் பெயரை இன்றைய அரசியல் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்க வேண்டிய நிலை வந்து விட்டது.

குடந்தை இன்று அரசியல் வரலாற்றில் அழியா புகழ்பெற்றுள்ளது. முன்பு இந்தி எதிர்ப்புக் காலத்தில் குடந்தை வீதிகளில் இந்தி எதிர்ப்பு வீரர்கள் போலீசாரால், தடியடிபட்டு, செங்குருதி கொட்டிச் செத்து மடிந்தனர். தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த தாளமுத்து தமிழுக்கு தன் இன்னுயிரை தத்தம் செய்தான்.

திராவிட முன்னேற்றக் கழகம் தியாகத்தைக் கொண்டே வளர்ந்து வருகிறது. அந்த இயக்கத்தை கத்தியை கையில் கொண்டு அழித்துவிட எண்ணினால் அதே கத்தி மற்றவர் கையில் போய் விளையாட ஆரம்பித்தால் நிலைமை என்னவாகும் ? நான் இப்படிச் சொல்வதால் நாமும் கத்தியை கையில் பிடிக்க வேண்டுமென்று தூண்டவில்லை. எத்தனை காலத்திற்கு இந்த தொல்லைகளை தாங்குவது என்ற நிலை ஏற்பட்டால் இந்த அமைதியின்மையும்—பயங்கர நிலைமையையும் உருவாகி விடும்.

எங்கள் மாபெரும் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் எங்களுக்கு போதித்துள்ள கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவைகளிலிருந்து இம்மியளவும் மாறமாட்டோம்.

அறிஞர் அண்ணா அவர்கள்

(8ம் பக்கம் பார்க்க)



17

"எப்படி உதயசூரியன்... திண்டாடி திணறி போவல!"

"சரிதாண்டி! எவனுவது இளிச்ச வாயன்கள் கிடைச்சா உங்க கைவரிசை யெல்லாம் காட்டுவிங்க!"

"ஏண்டியம்மா! உனக்குக் கோபம் இப்படி பொத்துகிட்டு வருது!"

"பின்ன என்ன! அந்த ஆளு என்ன சொன்னுரு! இப்படி ஒரேயடியா கஞ்சு காச்சிட்டிங்களே!"

"பொம்பளேங்க யெல்லாம் ஆம்பளேங்களுககு அடிமைன்னு சொல்லலாமா?"

"போடி! நீ பெரிய வீர தமிழச்சி மகதான்! ஆம்பளேக்கு இவ அடிமையே படமாட்டா!"

"நான் ஒரு நாளும் அடிமைப் படமாட்டேன், தெரியுமா?"

"ஏண்டி பூங்கோதை! உன் சங்கதியெல்லாம் தெரிஞ்ச என்னிடமே இப்படி கயிறு விடுறியே!"

"என்னடி என் சங்கதியெல்லாம் தெரியும்?"

"நேத்தி...சொல்லட்டுமாடி!"

"என்னடி நேத்தி சொல்லேண்டி!"

"இராத்திரி... சொல்லிடுவேன்!"

"என்னடி! ராத்திரி, நேத்தி உளறி கொட்றே!"

"அதுதாண்டி! நேத்தி ராத்திரி நடந்த சங்கதி!"

"என்னடி சற்குணு! ராத்திரி என்ன நடந்தது?"

"இவ வேற...வாழைப்பழத்தை உறிச்சு வைச்சாதான் சாப்பிடுவா போலிருக்கு!"

"ஏண்டி, சற்குணு! அவ வாழைப் பழம் சாப்பிட்டாளா? மலைப் பழமா? பேயன் பழமா?"

"எனக்கென்னடி தெரியும்! சாப்பிட்டவளைக் கேட்டால் தானே தெரியும்?"

"போங்கடி! இவளுங்க ஒழுங்கு! மற்றவளைப் பேச வந்துட்டாளுவ!"

"அப்படி வாம்மா வழிக்கு! இப்ப தெரியுதல்லே! அப்ப மட்டும் ஏன் ரோஷம் பொத்துகிட்டு வந்தது?"

பத்து பெண்கள் சேர்ந்தால் போதும்! இந்த உலகத்தையே உருட்டி வைத்துவிடுவார்கள்! பெண்கள் சாதுவானவர்கள், நாணம் மிகுந்தவர்கள், பேசத் தெரியாத ஊமைகள் என்பதை யெல்லாம் இவர்களுடைய பேச்சு பொய்யாக்கிவிட்டது!

என்ன இருந்தாலும் உதயசூரியனை இப்படிக் கிண்டல் செய்து, அவமானப்படுத்தியது சற்குணுவுக்கு அறவே பிடிக்கவில்லை! அவர் சிறந்த பேச்சாளர், எழுத்தாளர்! அவருக்கு இருக்கிற அறிவு என்ன, ஆற்றலென்ன? அந்தப் பெரிய மனிதரை இப்படியா அவமானப் படுத்துவது! சேச்சே பெண்கள் வர்க்கத்திற்கே இது இழுக்கு! அவரிடம் போய் முதலில் மன்னிப்புக் கேட்கவேண்டும்! சற்குணுவின் உள்ளம் இப்படி வேதனைப்பட்டுக் கிடந்தது!

சற்குணுவுக்குத் தனிமை தேவைப்பட்டது! எனவே அவர்களிடமிருந்து விடைபெற்றுக்கொண்டாள்!

உதய சூரியனுடைய உள்ளமும் இப்படித்தான் வேதனைப் பட்டுக்கொண்டிருந்தது! "நாம் அங்கே அப்படி பேசி இருக்கக் கூடாது! பெண்கள் ஆண்களிடம் அடிமைப் பட்டுக் கிடக்கிறார்கள் என்று இந்தக் காலத்தில் நினைப்பது பெரும் தவறுதான்! இந்தக் காலத்தில் ஆண்கள்தான பெண்களிடம் அடிபணிந்து கிடக்கிறார்கள்! சேச்சே! என்ன தவறு செய்துவிட்டோம்! பெண்கள் கூட்டத்தில் இப்படியா பேசுவது! நாகரீகம் நம்மிடம் கொஞ்சமும் இல்லையே! நம்மைப் பற்றி அவர்கள் என்ன நினைப்பார்கள்?' என்று ஒ[illegible] [illegible]கலையில் ஆழ்ந்து கிடந்தான்!

"அவர்கள் நினைப்பது இருக்கட்டும்! அவள் என்ன நினைப்பாள்? "அநாகரீகம் பிடித்தவன், கொஞ்சமும் அறிவில்லாதவன், முட்டாள்" என்றுதான் நினைப்பாள்! இதிலென்ன சந்தேகம்! நாமும் அப்படித்தானே நடந்துகொண்டோம்! யார், எப்படி நினைத்தால் நமக்கென்ன? நம்முடைய அறிவு மங்கியா போய்விடும்! ஒருக்காலும் போகாது! அப்படி நினைத்தால் நம்மை மறந்துவிடுவாளே, வெறுப்பாளே! அவளைக் கண்டது முதல் என் உள்ளம் அவளுக்கே அடிமையாகிவிட்டதே! நாமே பெண்களுக்கு அடிமையாகும் போது, நமக்கேன் இந்த வீறாப்பு வந்தது!" உதய சூரியனுடைய உள்ளம் இப்படித் தவித்துக் கொண்டிருந்தது!

"எப்படியாவது அவளை சந்திக்க வேண்டும்! நடந்த தவறுக்கு மன்னிப்புக் கேட்க வேண்டும்! அப்போதுதான் என் மனம் சாந்தி அடையும்!" என்று நினைத்துக் கொண்டே ஒரு பூங்காவிற்குள் நுழைந்தான்! கடும் வெய்யில் தந்த களைப்பை அந்த பூங்கா கொஞ்சம் கொஞ்சமாகப் போக்கிக் கொண்டிருந்தது! செடிகளும் கொடிகளும் அசைந்தாடி மெல்லிய பூங்காற்றை வீசிக் கொண்டிருந்தன!

உதயசூரியன் எழுத்தாளன் அல்லவா! வெண்சாமரம் வீசி நம் களைப்பைத் தீர்க்கும் இந்தப் பூஞ்செடிகளுக்கு இருக்கிற இளகிய மனம் அவளுக்கு இருக்குமா என்ற எண்ண ஓட்டத்திலே அவன் சிந்தனையை செலுத்திக் கொண்டிருந்தான்!

"இந்தப் பச்சைப் பட்டு விரித்த பசும் புற்றரையில் படுக்க வேண்டும். அப்படியே அயர்ந்து தூங்க வேண்டும், அவள் இங்கே வரவேண்டும்! "அத்தான், அத்தான்! இந்த பசும்பொன் மேனி இந்தப் பச்சைத் தரையிலா கிடப்பது" என்று என்னைத் தட்டி எழுப்ப வேண்டும்!" என்று கற்பனை உலகில் சஞ்சரித்தபடியே படுத்தான். தூங்கியும் விட்டான்!

அடுத்த இதழ்

அண்ணு

பிறந்த தின இதழ்!

★★★

"மாலை மணி"யின் அடுத்த 11–9–60ம் தேதி இதழ் அண்ணு பிறந்த தின இதழாக வெளி வருகிறது. இயக்கத் தலைவர்கள் உள்ளிட்ட பல பெரியவர்களின் கருத்துக்கள் இடம் பெறுகிறது!

விலை 16 காசு

நிர்வாகி,

மாலைமணி

சென்னை மை லேடிஸ் கார்டன், மிகப் பிரசித்தி பெற்றது என்று சொல்லுகிறார்களே! வந்ததுதான் வந்தோம் அதையும் பார்த்து விட்டுதான் போவோமே" என்று எண்ணியபடி சற்குணா மைலேடிஸ் கார்டனில் நுழைந்தாள்!

அவள் செய்து கொண்ட கற்பனை வடிவத்தில் அந்த பூங்கா இல்லைதான்! என்றாலும் அதிலே ஏதோ ஒரு கவர்ச்சி இருப்பதைக் கண்டாள்! அந்த கவர்ச்சி மீது அவள் மனம் நாட்டம் கொள்வதையும் அவள் அறிந்தாள்!

கண்ணைப்பறிக்கும் வண்ணத்தில் பூத்துச் சிரித்துக் கொண்டிருந்த பூக்களின் ஒய்யாரத்தைக் கண்டு மிகவும் வியந்தாள்! செடிகளை பல உருவத்தில் வெட்டப்பட்டிருந்த நேர்த்தி அவளுக்கு மிகவும் பிடித்திருந்திருந்தது! பசும் புல்தரை அவளுடைய மனதை எத்தனையோ வகையில் கொள்ளை கொண்டது! வியப்புக்குரிய காட்சிகளை கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டே அந்தத் தோட்டத்தை சுற்றி வந்தாள்!

சிற்பிகளின் திறமையான படைப்பில் உருவான பல சிலைகளைக் கண்டு. கண்ணையும், மனதையும் குளிர வைத்துக் கொண்டாள்!

தோட்டத்திற்கு நடுவிலே வைக்கப்படடிருந்த அசோகஸ் தூபியை அண்ணாந்து பார்த்துக் கொண்டே அதன அருகே நின்றுகொண்டிருந்தாள்! "ஐயோ" ஏதோ தடுக்கி கீழேயே விழுந்து விட்டாள்?" கொஞ்சம் கூட நாகரீகம் தெரியவில்லை! சோம்பேறிகள் தூங்க இங்கே தான் இடம் கிடைச்சுது போலிருக்கு என்று முனு முனுத்துக் கொண்டே எழுந்தாள்! "ஆளைப் பார்த்தால் வெள்ளையும் சள்ளையுமா இருக்கு", என்று அந்த ஆசாமியை உற்று நோக்கினாள்! ஓகோ இவர் தானா? இவர் ஏன் இங்கே வந்தார்! நமக்கென்ன; யார் எங்கே வந்தா! என்றுமீண்டும் அந்த அசோக ஸ்தூபியின் அருகில் சென்று கொணடிருந்தாள்!

அவருடைய வாய் தான் "நமக்கென்ன" என்று சொல்லிற்றே தவிர அவளுடைய உள்ளம் அதை நினைக்க ஏனோ மறுத்து விட்டது? திரும்பி வந்தாள்! "என்னங்க, என்னங்க, உங்களைத் தானே" என்று எழுப்பலானாள்! அவன் தூக்கத்திலிருந்து எழுந்து கொண்டான் என்பதை அவளது உதடு சைகை காட்டிற்று! என்றாலும் அவனது கணகள் மட்டுமே தூங்கிக் கொண்டே தான் இருந்தது!

என்னடா இது பெரிய சங்கடமா போச்சு! அதுக் குன்னு ஒரு மனுஷன் இபபடியா தூங்குவது" என்று சலித்துக் கொண்டாள்! மீண்டும் "என்னுங்க, என்னுங்க" என்று எழுப்பலானாள்! மனுஷன் எழுந்திருக்கவே இல்லை? பககத்திலிருந்த ஒரு செடியை ஒடித்தாள்—அந்த செடியால் மெல்ல தட்டி எழுப்ப முயற்சித்தாள்! அவன் திரும்பி திரும்பி படுத்தானே தவிர கண்ணை மட்டும் திறக்கவே, இல்லை! அந்த செடியால் 'சரீர்' என்று வேகமாக ஒரு அடி அடித்தாள்! அப்பாடி" என்று அவன் எழுந்தான்! அந்த அப்பாடா சத்தம் அவளுடைய உள்ளத்தை உலுக்கி விட்டது! "ரொம்ப வலிக்குதா என்று கேட்டுக் கொண்டே அவளது கரம் அவளையும் அறியாமலேயே தடவிக் கொடுக்க ஆரம்பித்தது!

"வலிக்குதா" என்று மீண்டும் கேட்டாள்!" உன்னுடைய கை பட்டபின் வலிக்குமா?" என்று கேட்டான்! அப்போது தான் அவளுடைய கை அவன் மீது இருந்ததை உணர்ந்தாள்! வெடுக்கென்று எழுந்து நின்றாள்!

"எங்கே போறே!" என்று அவனும் எழுந்தான்!

"சாமியாரே! கொஞ்சம் மரியாதையாகவே பேசுங்க!" என்றாள் அவள்!

"சாமியாரா? நான் என்ன காவியா கட்டி இருக்கேன்?"

"வெள்ளை வேட்டிச் சாமியாராக இருக்கலாம்! என்று அவன் கிண்டல் செய்தாள்!

"ஆமாம், ஆமாம்! நான் குடும்பச் சாமியார்தான்!"

"அப்படி என்றால்?" அவள் ஆவலோடு பதிலை எதிர்பார்த்தாள்!

"தன் மனைவியோடு மட்டுமே வாழ்பவனுக்கு குடும்பச் சாமியார் என்று பொருள்!

"அப்படி என்றால் உங்களுக்குதிருமணமாகி விட்டதா?" அவளுடைய முகத்தில் கொஞ்சம் கவலை ரேகை படரத்தான் செய்தது!

"ஓ! ஆகிவிட்டதே"

"அப்படியா? உங்கள் மனைவி எங்கே இருக்கிறாள்?"

"இங்கே தான்...!"

"இங்கே என்றால்...சென்னையிலா?"

"இல்லை, இல்லை! இங்கேயே இந்த இடத்திலேயே இருக்கிறாள்" என்று அவளை அணைத்துக் கொண்டான்! அவளும் அந்த அரவணைப்பிலே சிக்கி மயங்கிக் கிடந்தாள்!

(தொடரும்)

மனோகரன் பேச்சு

(12ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் சுதந்திர உணர்வை சித்தரிக்க ஆரம்பித்தார்கள்; கதாசிரியர்கள் நாகநாட்டைப் பற்றியே கற்பனையை திறந்து விட்டனர். கவிஞர்கள் தங்கள் கவிதை மூலம் தங்களின் லட்சிய நாகநாடடைப்புனைய ஆரம்பித்தனர். பெண்கள் தங்களின் எந்தப் பாடல்களிலும் தங்களின் சுதந்திர வேட்கையைப் பாடினர். கோலம் போடும் போதும் நாட்டைப்பற்றிய உணர்வு வெளிப்பட்டது. என்ன செய்வது என்று திகைத்தனர். ஏனோதானோ' என்று பேசிய டெல்லி அரசினர். படிக்காத நாகர்கள் தான் இந்த கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களை ஒரு சிலர் ஏமாற்றி இருக்கிறார்கள். ஆகவே டெல்லியிலிருந்து படித்த நாகர்களை அனுப்பி அங்குள்ளவர்களை சமாதானப் படுத்தலாம் என்ற நப்பாசையால் சில படித்த நாகர்கள் அனுப்பப்பட்டனர். அங்கே மாநாடு நடந்தது. டெல்லியிலிருந்து அனுப்பப்பட்ட படித்த நாகர்களும், விடுதலை உணர்வு கொண்ட படித்த நாகர்களும் அங்கே கூடி படித்த நாகர்கள் அங்கே இலக்கிய உணர்வோடு இலக்கண வரம்போடு நாகரீகத்தைப்பற்றி பல பட பேசி அவர்களின் உணர்வை திசை மாற்ற முயன்றனர்; ஆனால் இலக்கணமறியாத, இலக்கியமறியாத நாகரீகமறியாத நாகர்கள் பேசிய நாட்டுப் பற்றும், உரிமைக் கிளர்ச்சியும், இலட்சிய வெறியும் கொண்ட பேச்சுக்களின் முன் படித்த நாகர்களின் முயற்சி பலிக்காமல் பலனற்றுப் போயின.

கடைசியில் படிக்காத நாகர்களின் விவாதத்தையே — உரிமைக் கிளர்ச்சியையே 'வக்காலத்து' பெற்று வந்த படித்த நாகர்கள் ஒத்துக் கொள்ளும் ஆச்சரிய நிலை ஏற்பட்டது. நாகர்களின் கோரிக்கையை டெல்லி அரசாங்கம் ஒத்துக் கொள்ள வேண்டிய நிலையும் ஏற்பட்டது. அவர்களின் கோரிக்கையின் ஜீவனே 'நாகநாடு' (Naga Land) என்பது தான். பஞ்சாயிலும், ஆந்திரத்திலும் மற்ற பிற இடங்களிலும் போராடிக் கேட்டது மொழி வழியாக மாநிலம் அமைய வேண்டும் என்பது; அதாவது State. ஆனால் நாகாகள் போராடியது இன வழியாக 'நாகநாடு' என்ற பிரிவினையைக் கேட்டார்கள்; பெற்றார்கள்!

இந்த நாகநாடு டெல்லியில் உள்ள வெளிவிவகார இலாகாவுடன் மட்டுமே தொடர்பு கொள்ளுமே தவிர, டெல்லியின் அரசுடன் வேறு எந்த உறவும் கொள்ளாது. நாகர்கள் இதை எப்படிப் பெற்றார்கள்? டெல்லியை உதைத்தார்கள்; உரிமை கிடைத்தது!

அதனால், நான் நம் உரிமையைப் பெற டெல்லியை உதைக்கத்தான் வேண்டும் என்று கூறுவதாக அர்த்த மல்ல; அந்த நிலைக்கு நாம் என்றுமே போகவும் விரும்ப வில்லை. ஆயினும் டெல்லி ஆட்சியின் போக்கை விமர்சிப்பதற்கே இதை உங்களிடம் முன் வைத்தேன்,

வட நாட்டு அரசாங்கம் இன்று பலஹீன மடைந்து வருகிறது. அதற்குத் தெளிவான கொள்கைகள் கிடையாது; இங்குள்ள காட்டிக் கொடுக்கும் எட்டு கங்காணிகளை வைத்தே நம்மை அழித்து விடலாமென்று எண்ணுகின்றனர். இந்தஎட்டப்பர்களால் நம்மைஎதுவும்செய்ய முடியாது; எனவே எதற்கும் அஞ்சாமல் கழகத்தின் கொள்கைகளை சிறமேற்கொண்டு மேலும் மேலும் வலுப் படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்வதுடன் 1962 ம் ஆண்டு நடைபெறப் போகும் பொதுத தேர்தலில் காங்கிரஸகாரர்களுக்கு நல்ல புத்தி புகட்ட வேண்டும் எனறு கூறிக் கொண்டு உங்களிட மிருந்து விடை பெறுகிறேன். வணக்கம்.

குணக்குன்று மறைந்தது!

★★★

திராவிட முன்னேற்றக் கழக வளர்ச்சிக்கு பெரும்பணி புரிந்து, திராவிடப் பெருங்குடி மக்களின் பேரன்பைப் பெற்று விடுதலை வீரராய் திகழ்ந்துவந்த குணக்குன்று திரு. பெத்தாம் பாளையம் பழனிச்சாமி நம்மையெல்லாம் தவிக்க விட்டு மறைந்துவிட்டார்! அவருடைய மறைவு செய்தியைக்கேட்டு தமிழகமே சோகத்தில் ஆழ்ந்துகிடக்கிறது!

அவருடைய இழப்பு, நமக்கும் நாட்டிற்கும் ஈடுசெய்யமுடியாத இழப்பாகும்.

அவரைப் பிரிந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கும், இயக்கத் தோழர்களுக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

—ஆசிரியர்.

குடந்தையிலே ஒரு கொள்கை வீரனை தத்தம் செய்தோம் !-தவிக்கிறோம்!

கலகம் செய்தான், அடிபட்டான், செத்தான் என்கிறார் ஒரு அமைச்சர் !

மூட்டைப் பூச்சி மருந்தைச் சாப்பிட்டான், மயங்கினான், செத்தான் என்கிறார் ஒரு அமைச்சர் !!

எல்லாம் கேலிக் கூத்தாக இருக்கிறது ! எல்லாம் கோமாளித்தனமாக இருக்கிறது !!

எங்களை அவரது அன்புப் பார்வையாலும், அறிவு மொழிகளாலும் அடக்கி வைத்திருக்கிறார். அப்படி என்றுமே அடங்கி இருக்கும் சூழ்நிலை நிலவி வருமென்று எண்ணிவிடாதீர்கள் — அந்த நிலைக்கு எங்களை அழைத்து கொள்ளாதீர்கள்.

குடந்தை இராமலிங்கம் ஏன் மரணமடைந்தான் ?

அன்று குடந்தையில் காங்கிரஸ் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் ஒரு கயவன்—அரசியல் அயோக்கியன் —அரசியலை சந்தைக் கடையாக மாற்றிக்கொள்ளும் சமுக்கன். நம் தலைவர்களை தரம் கெட்ட முறையில் தாக்கி யுள்ளான். கொள்கை வீரன் இராமலிங்கம் அரசியல் மேடைகளில் கண்ணியத்தை கடைப்பிடிக்க வேண்டுமென்று அறிவுறுத்தினான். காங்கிரஸ் காலிகள் தாக்கி அவன் இன்னுயிரை மாய்த்து விட்டனர். இராமலிங்கம் கட்டிளம் காளை. 26 வயது நிரம்பியவர். மணமாகாதவர். வாழ்நாளில் பல இன்பங்களை அனுபவிக்க வேண்டியவர். அப்படிப்பட்ட இளைஞரின் இன்னுயிரைப் பறித்துவிட்டனர் மாபாவிகள். "அவர் செய்த குற்றம் என்ன ? தலைவர்களை தரம் கெட்ட முறையில் தாக்காதே ! மேடையில் அரசியல் நாகரீகத்தைக் காப்பாற்றுங்கள் என்று உரைத்ததேயாகும்.

காந்தியாரின் வழி வந்தவர்கள் என்று தம்பட்டம் அடித்துக் கொள்கிற காங்கிரஸ்காரர்கள் நன்றாக உதைத்து போலீசார் வசம் ஒப்புவித்தார்கள். போலீஸார் பாதுக்காவலில் வைத்தார்கள். பாதுகாவலில் வைக்கப்பட்ட அரைமணி நேரத்திற்குப்பின் கொள்கை வீரன் ராமலிங்கம் பிணமாக வெளியே கொண்டு வரப்பட்டான். காலிகள் அடித்து, அந்த கொள்கை வீரனைக்குற்றுயிராக்கினார்கள். பின் காவல் நிலையத்திலிருந்து ஜீவனழிந்த உடலாக வெளியே கொண்டு வரப்பட்டது. இந்த நிலையை அறிந்த உடன் குடந்தை மாநகரே பரபரப்பாகியது. மக்கள் உள்ளம் உணர்ச்சிப் பெருக்கில் பொங்கி எழுந்தது. "எதையும் தாங்கும் இதயம்" கொண்ட நம் தோழர்கள் பொறுமையைக் கடைப்பிடித்தனர்.

நம்முடைய கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவரான கலைஞர் கருணாநிதி சட்ட மன்றில் ராமலிங்கம் மரணம் அடைந்ததைக் குறித்து பாதுகாவல் துறை அமைச்சர் பக்தவத்சலம் அவர்களிடம் ஒரு அவசரக் கேள்வியொன்றைக் கேட்டார். அதற்கு அமைச்சர் பக்தவத்ஸலம் "முழு தகவல் வரவில்லை. வந்தவுடன் அறிவிக்கிறேன்" என்று மழுப்பி விட்டார்.

நம்முடைய கருணாநிதி அத்தோடு விடவில்லை இந்த மாநிலத்தின் முதலமைச்சர், பச்சைத் தமிழர் காமராஜரிடம் கும்பகோணத்தில் நடந்த கோர சம்பவத்தை எடுத்துரைத்தார். அதைக் கேட்ட மனிதப் பண்பற்ற—இதயமற்ற முதலமைச்சர் காமராசர் என்ன கூறினார் தெரியுமா ? 'கூட்டத்தில் கலகம் செய்ததால் அடித்திருக்கிறார்கள், அவனும் செத்து இருக்கிறான். இதில் என்ன புதுமை ?" என்ற பொருள் பெறும்படி கூறியிருக்கிறார். இப்படிப்பட்ட இரக்கமற்ற — மனிதாபிமானமற்ற — சண்டாளர், முதலமைச்சர் என்ற பதவியின் அகங்காரத்தால் கூறியிருக்கிறார். அவரிடம் நாம் எதை எதிர்பார்க்க முடியும் ? குடும்ப பாசமில்லாத ஒருவரிடம் நாம் இதைத் தவிர வேறு எதைத்தான் எதிர் பார்க்க முடியும்?

நம் மாநிலத்து உள் துறை அமைச்சர் எம். பக்தவத்ஸலம் அவரைவிட ஒருபடி மிஞ்சிவிட்டார். முதல்நாள் கருணாநிதி சட்ட மன்றத்தில் கேட்ட கேள்விக்கு எம்,பக்தவத்ஸலம் "முழு விபரமும் கிடைக்கவில்லை. கிடைத்த உடன் பதிலளிக்கிறேன் என்றார், ஆனால் இரண்டாம் நாள் தந்த பதிலில் குறிப்பிடுகிறார் இராமலிங்கம் மூட்டைப்பூச்சி மருந்தை உண்டு இறந்தார் என்று!

சமீபகாலமாக இந்த மாநிலத்தில் நடைபெறும ஒவ்வொரு மரணத்திற்கும் கூறும் காரணம் மூட்டைப் பூச்சி மருந்துதான் — அதே பாணியில்தான் அமைச்சரின் பதில் மூட்டைப் பூச்சி மருந்தை சுட்டிக் காட்டியது.

நாட்டு மக்களிடையே எழுந்திருக்கின்ற உணர்ச்சியை—பரபரப்பை இந்த விதமான கோணங்கி — கோமாளி சமாதானத்தால் சமாளித்து விடலாம் என்று நினைக்கிறார் அமைச்சர். மக்கள் அவ்வளவு பகுத்தறிவு அற்றவர்களாக இப்போது இல்லை!

நானும் நமது நண்பர் மதுரை முத்துவும் இந்த மூட்டைப் பூச்சி மருந்தைப்பற்றி விவாதித்தோம். அப்போது எங்களுக்குக கிடைத்த விபரம் மூட்டை பூச்சி மருந்தை சாப்பிட்ட இரு நிமிடத்திற்கெல்லாம் வாந்தி வருமென்றும் ஐந்து நிமிடத்திற்கு அப்புறம் நீண்ட அமைதியில் (மரணத்தில்) ஆழ்ந்துவிட வேண்டும் என்றும், எங்களுக்கு செய்தி கிடைத்தது. இந்த இடத்தில்தான் நான் சொல்வதையும் கவனிக்க வேண்டும் —இந்த அரசியல் யோக்யர் எம். பக்தவத்ஸலம் சொல்வதையும் கவனிக்க வேண்டும்.

மாண்ட மாவீரன் இராமலிங்கம் ஆறு மணி கூட்டத்திற்கு தன் வீட்டிலிருந்து 5-30 மணிக்குப் புறப்பட்டிருக்க வேண்டும். அமைச்சர் பக்தவத்ஸலத்தின் விவாதப்படி அவர் மூட்டைப் பூச்சி மருந்தை சாப்பிட்டிருந்தால் கூட்டத்திற்கு வந்திருக்க முடியாது. ஆனால் இராமலிங்கம் கூட்டத்திற்கு 6 மணிக்கு வந்திருக்கிறார். அப்பொழுதும் அவர் நல்லநிலைமையிலேயே இருந்திருக்கிறார். மூட்டைப் பூச்சு மருந்து ஒன்றும் செய்யவில்லை. பின் கேள்வி கேட்டிருக்கிறார்— உதைத்திருக்கிறார்கள் — ஒரு அறையில் வைத்து பூட்டியிருக்கிறார்கள். அப்பொழுதும் மூட்டைப் பூச்சு மருந்து ஒன்றும் செய்யவில்லை. பின்னர் போலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு, அரை மைல் நடந்து சென்று போலீஸாரின் பாதுகாவலில் வைக்கப்பட்டு சுமார் 9-30 மணிக்கு மேல் உயிர் போய் இருக்கிறது. நான் அமைச்சரை கேட்க ஆசைப்படுகிறேன் : மூன்று மணிநேரம் மூட்டை பூச்சு மருந்து வேலை செய்யாமல் அதன் பின்னர்தான் வேலை செய்திருக்கிறதா ? இப்படியெல்லாம் அயோக்கியத்தனமான பேச்சுக்களால் மக்களின் வீறிட்ட உணர்ச்சியை அடக்கப்பார்க்கிறார். ஒருவன் இறந்திருக்கிறான்; அவன் ஏன் இறந்தான் ? எப்படி இறந்தான் ? என்று காரணம் கேட்கிறோம். அதற்கு அமைச்சர் கோமாளித்தனமாகவும், கிண்டலாகவும் பதில் தருகிறார்.

நாம் செத்தவன் பிணத்தை வைத்து வளர வேண்டிய நிலையில் இல்லை; நமக்கு அந்த அவசியமும் இல்லை. இந்த நாட்டில் அராஜகம் ஒரு தொடர்கதையாகவே இருந்து வருகிறது.

நமக்கு இப்படிப்பட்ட அராஜகங்களும், காலித்தனங்களும் புதிதல்ல; பலவற்றைக் கண்டிருக்கிறோம். பல மாவீரர்களை இழந்திருக்கிறோம்.

திராவிடர் கழகமாக நாம் இருந்தநேரத்தில் புகழ்படைத்த வைகைப் பெருங் கரையில் நடைபெற்ற மாநாட்டின் பந்தலைத் தீயிட்டு சாம்பலாக்கினார்கள். அந்த பிடி சாம்பலைக் கண்டும் நாம் கலங்கினோமில்லை. உடையார் பாளையம் ஆசிரியர் வேலாயுதம் அவர்களை அடித்து கொலை செய்து மரக் கிளையில் தொங்க விட்டனர் ... இப்படி நாம் கண்டவை பலபல ! அதை பார்த்த நேரத்திலெல்லாம் நாம்

(12ம் பக்கம் பார்க்க)

நாட்டிலே குழப்பமும், கொந்தளிப்பும் ஏற்படக் காரணம் என்ன?

ஆட்சியாளரின் விபரீத போக்கே யாகும்!

[சம்பத் பேச்சு தொடர்ச்சி]

நாங்கள் நம்பும் வகையில், அமைச்சர்களும் நிபுணர்களும் பேசி வந்தனர். ஆனால் இன்று நாம் காண்பது என்ன? எங்கு ஏற்கெனவே ஒரு அணு உலை இருக்கிறதோ, அங்குதான் அணு மின்சார நிலையமும் நிறுவப்படுகிறது. "இரயில்வேக்களை எடுத்துக் கொண்டால், எங்களுக்குப் பயங்கரமான அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது அந்தக் கொடிய அநீதி தொடர்ந்து இழைக்கப்படுகிறது! வேறு இதர அம்சங்களைவிட, புதிய இரயில் பாதைகள் போடும் விஷயத்தில் மத்திய சர்க்கார், நிர்ணயிக்கப்பட்ட தேவைகளின் அடிப்படையில் காரியம் செய்வதில்லை என்பதும், பிரதேசச் செல்வாக்குகளுக்குக் கட்டுப்பட்டு நடந்து கொள்ளுகிறது என்பதும் வெளிப்படையாகும்.

"மிகச் சக்திவாய்ந்த 'இந்து' ஆங்கில தின இதழில், அதன் புதுடில்லி தனி நிருபர் கடந்த மார்ச் 30-ந் தேதியன்று எழுதிய கட்டுரை ஒன்று, எங்கள் பகுதியில் பெரும் பரபரப்பினை ஊட்டியது. தென்னாடு எப்படியெல்லாம் வஞ்சிக்கப்படுகிறது என்பதை ஆதாரங்களோடும், புள்ளி விவரங்களோடும் அவர், அந்தக் கட்டுரையில் விளக்கியிருந்தார்; உறுதி அளிக்கப்பட்ட புதிய பாதைகள்கூட —அத்தியாவசியமாகத்தேவை; பணம் செலவிடுவதற்கு எல்லா நியாயமும் உண்டு என்றபாதைகள் கூட — தென்னாட்டைப் பொறுத்து அங்கீகரிக்கப்படவில்லை. ஆனால் அதே நேரத்தில் பணம் செலவிட எந்தவிதமான நியாயமும் இல்லாத பல புதிய இரயில் பாதைகள் வடநாட்டிலும், இதர பகுதிகளிலும் அமைவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது' — இப்படி விளக்கிய அவர், மத்திய சர்க்கார் தென்னகத்தைப் புறக்கணிக்கிறது' என்றும் குற்றஞ்சாட்டியிருந்தார்.

"இந்தக் கட்டுரைக்கு அதே இதழில், இரயில்வே அதிகாரி ஒருவர் ஏப்ரல் 20-ந்தேதி மறுப்பு ஒன்று எழுதினார். "ஆனால், அந்த இதழில், முன்பு எழுப்பப்பட்டிருந்த குற்றச்சாட்டுகள் எதனையும் அவர் மறுக்கவில்லை.

"ஆனால் அந்த மறுப்பிலிருந்து ஒரு உண்மை வெளிப்பட்டது. 'எங்கு பெரும் தொழில் அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டனவோ அங்குதான் புதிய இரயில் பாதைகள் போடப்படுகின்றன' என்று அந்த அதிகாரி கூறியிருந்தார்.

"ஆனாலும், முதல் திட்டத்தில் அமைந்த கொல்லம்—எர்ணாகுளம் பாதை நீங்கலாக இரண்டாம் திட்டத்தில் தென்னிந்திய இரயில்வே 'சர்வே' நடத்திய எந்த ஒரு இரயில் பாதை அமைக்கும் திட்டமும் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

"அது மட்டுமல்ல; மூன்றாம் திட்டத்திலும், ஒரு மைல் நீளத்திற்குக் கூட தென்னாட்டில் புதிய பாதைகள் அமைக்கத் திட்டமில்லை. இந்த உண்மை மறுக்கப்பட முடியாதது.

"தென்னாட்டிற்குப் புதிய பாதைகள் இல்லாமற் செய்யப்பட்டிருக்கிறது என்பது மட்டுமல்ல; அதற்குத் தரப்படும் விளக்கம்தான் என்ன? தென்னிந்திய இரயில்வே பணிபுரிகிற நான்கு தென் மாநிலங்களிலும் புதிய இரயில் பாதைகள் எதுவும் போடுவதை அவசியப்படுத்தும் அளவுக்கு, தொடர்ந்து மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் தொழில் வளர்ச்சி இல்லை என்பதுதானே?

"ஆனால், பெரும் தொழில்களை எங்கே நிறுவுவது என்ற முடிவினைச் செய்யும் சலுகையைப் பெற்றிருப்போரிடம் நாங்கள், பெருந்தொழில் எதுவும் எங்கள் தென்னாட்டிற்கு இல்லாமற் செய்யப்பட்டிருக்கிறதே, ஏன்?' என்று கேட்டால், சாதாரணமாகச் சொல்லிவிடுகிறார்கள் - உங்கள் நாட்டில் போக்குவரத்து வசதி இல்லையே, என்ன செய்வது?' என்று!

"நாங்கள் இரயில்வே அமைச்சரவையை, அணுகி, 'எங்களுக்குப் போக்குவரத்து வசதி வேண்டும்; எனவே இரயில் பாதைகள் அமைக்க அனுமதி தாருங்கள்" என்றால், அவர்கள் சொல்லுகிறார்கள்—'உங்கள் நாட்டிற்குப் புதிய பெருந்தொழில் அபிவிருத்தித் திட்டம் எதுவும் இல்லை; எனவே புதிய பாதைகள் உங்களுக்குக் கிடையாது'—என்று! "எனவே, எங்கள் நிலை என்ன? எங்கள் நாட்டிற்குப் புதிய இரயில் பாதைகள் கிடையாது—ஏனென்றால், எங்கள் நாட்டில் போதுமான தொழில் வளர்ச்சி இல்லை! 'எங்கள் நாட்டிற்குப் புதிய தொழில் வளர்ச்சி இல்லை—ஏனென்றால், எங்களுக்கு புதிய இரயில் பாதைகள் தரப்படவில்லை! இதுதானே! இந்தப் போக்கு, ஜவகர்லால் நேரு தலைமை தாங்கும் ஒரு ஒரு அமைச்சரவைக்குப் பெருமை தரக்கூடியது அல்ல!

"அப்பாவியான வாடிக்கைக்காரரை மோசடி செய்ய சந்தைக் கடையில் கையாளப்படும் அற்பத்தனமான தந்திரம் தான், 'தொழில் வளர்ச்சி இல்லை—ஏனென்றால் இரயில் பாதை கிடையாது; இரயில் பாதை கிடையாது—ஏனென்றால், தொழில் வளர்ச்சி இல்லை' என்று கூறப்படுவதும்!

"எத்தனை நாளைக்கு நாங்கள் இந்த அநீதியைப் பொறுத்துக் கொள்வது? இதைத்தான், தென்னாட்டு மக்கள் இங்கு கேட்க விரும்புகிறார்கள்.

'இரண்டாம் திட்டக் காலத்தில் புதிய இரயில் பாதைகள் அமைக்கவும் இரயில்பாதைகளை மின்சார மயமாக்கவும் செலவிடப்பட்டிருப்பது ரூ. 156 16 கோடியாகும்; இதில் தென் பிராந்திய இரயில்வேயில் செலவிடப்பட்டது ரூ 92 இலட்சம் தான்; கணக்கிட்டுப் பார்த்தால், தென் பிராந்திய இரயில்வேய்க்குக் கிடைத்தது. மொத்தச் செலவில் ஒரு சதவிகிதத்தில் மூன்றில் இரண்டு பங்குதான்! மூன்றாம் திட்டத்திலும், ஒரு மைல் நீளத்திற்குக்கூட புதிய இரயில் பாதை இல்லை என்று கூறப்பட்டுவிட்டது! நாங்கள் கேட்கும் புதிய பாதைகள் இரண்டு மூன்று மாநிலங்களை இணைக்கும் பாதையாகும். உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், சாமராஜ நகர்—சத்தியமங்கலம் சேலம்—பெங்களூர் இரயில் பாதைத் திட்டங்களைக் கூறலாம். இந்தத் திட்டம், மைசூர் மாநிலத்தினுடையவும், தமிழ் நாட்டினுடையவும் தொழில்-பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும். இந்தத் திட்டம் முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் கவனிக்கப்படவில்லை இப்போது மூன்றாம் திட்டத்திலும் இல்லை.

'சேலம்—பெங்களூர் பாதைக்குக் குறைந்தபட்சம் முதலிடம் கிடைத்திருக்க வேண்டும்; சேலம் - பெங்களூருக்கிடையே 100 மைல் நீளத்திற்கு இரயில் பாதை போட்டாக வேண்டும் ஆனால் இதில் 50 மைல் நீளப் பாதை, ஏற்கனவே இருந்து யுத்தத்தின்போது அகற்றப்பட்டதாகும். இந்தத் திட்டத்தை நிச்சயம் ஏற்றுக்கொள்வதாக திரு. லால்பகதூர்சாஸ்திரியார் இரயில்வே அமைச்சராக இருந்தபோது 'சத்தியம்' செய்திருந்தார்; ஆனால் இது 1954-ம் ஆண்டில்! இதர அமைச்சர்கள், அந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை; சாஸ்திரியாரே இரயில்வே அமைச்சராக நீடித்திருந்தாலும் கூட, அது நிறைவேறியிருக்குமா என்பதில் எனக்கு சந்தேகம்தான்!

"ஏதாவது அரசியல் நெருக்கடி நிர்ப்பந்தம் ஏற்படும்போது இனிக்க இனிக்க உறுதிமொழி தருகிறார்கள்; ஆனால் அந்த உறுதிமொழிகளை நிறைவேற்ற மட்டும் முன்வருவாரில்லை. பின் இந்த சர்க்கார்மீது மக்கள் குற்றஞ்சாட்டுவதில் தவறென்ன? தங்கள் கோரிக்கைகளை வலுவான முறையில் எடுத்துரைக்க முற்படுவதில் தவறென்ன?

"மீண்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன்; 'ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு உரத் தொழிற்சாலை அமையும்' என்று உணவு அமைச்சர் உறுதிமொழி கூறினார். உணவு உற்பத்தியில் பெருமைப்படக்கூடிய நியாயம் உடைய ஆந்திர மாநிலத்தில் ஒரு உரத் தொழிற்சாலை இருந்தாக வேண்டும்; இந்த அவசியத்தை மறுப்பாரில்லை; ஆனால், அத்தகைய ஒரு உரத் தொழிற்சாலையை ஆந்திரத்தில் நிறுவ எவ்வித துரித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஏற்கனவே உள்ள சிறு தொழில்களுக்குத் தேவையான தேனிரும்பு, இதர மூலப் பொருள்கள் கிடைப்பதிலும் தென்னாட்டைப் பொறுத்துப் பெரும் கஷ்டங்களுக்கு ஆளாக்கப்படுகிறோம்.

'இது போன்ற சிறு விவகாரங்களிலிருந்து, மொழிப் பிரச்சினை போன்ற பெரிய விவகாரங்கள் வரை, தென்னாட்டின் குரல் அலட்சியப்படுத்தப்படுகிறது; ஏனெனில்—டெல்லியில் எனக்குக் கிடைத்துள்ள குறுகிய அனுபவத்தைக் கொண்டு சொல்கிறேன் — இங்குள்ளோருக்கு ஒரு வகையான மனப்போக்கு, எண்ணம் இருக்கிறது அதாவது, தென்னாட்டு மக்கள் சுருக்கெழுத்தாளர்களை உற்பத்தி செய்கிற ஒரு இனத்தவர்; அவர்களது ஆசைகள் அத்துடன் நிற்க வேண்டுமே தவிர, இங்குள்ள மக்கள் அனுபவிப்பதைப்போல — 'பிராட்கேஜ்' இரட்டைப் பாதைகளும், 'மீட்டர்கேஜ்' இரட்டைப் பாதைகளும் பெருந்தொழில்களும், இன்னும் அதுபோன்ற பலவும் பெற்று வாழ வேண்டும் என்று நினைக்கக்கூடாது— என்று இங்குள்ளவர்கள் எண்ணுகின்றனர்.

'ஆனால், இங்கு பெரும் அதிகாரம் பெற்று விளங்குவோர

(11ம் பக்கம் பார்க்க)

ரௌடிகளைக் கொண்டு காலித்தனத்தில் இறங்காதீர்கள்!

அது பயங்கரமான விளைவுகளை உருவாக்கும்!

அதிகாரம் காங்கிரஸ்காரர்களுக்கு மட்டும் சொந்தமல்ல! நாளை அது அண்ணாவின் கைக்கும் மாறும்! அதிகாரிகள் இதை உணர்ந்து கடமையாற்ற வேண்டும்!

சென்னை மாவட்ட செயலாளர் மணிவண்ணன் முழங்கும் முதல் முழக்கம்!

சென்னை 50-வது வட்டம் புரசை சண்முகராயபிள்ளை தெருவில் சென்ற 25-8-60-ம் தேதி அன்று நடைபெற்ற கலைவாணர் நினைவு மன்ற பொதுக்கூட்டத்திற்கு தோழர் பச்சையப்பன் தலைமை வகித்தார். டேப் நடராசன் இசை வழங்கினார். பல தோழர்கள் பேசியபின் சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக செயலாளரும், சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினருமான தோழர் தி. மணி வண்ணன் நீண்ட கையொலிக்கு இடையே பேசியதாவது.

★★

அன்புள்ள தலைவர் அவர்களே! அருமை நண்பர்களே! தாய்மார்களே! நான்

புதிதாக சென்னை மாவட்டத்திற்கு செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு முதன் முதலாக இந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் பேசும் வாய்ப்பு கிட்டியதற்கு பெரிதும் மகிழ்வதுடன் கலைவாணர் நினைவு மன்றத்தாருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்குமுன் பேசிய நண்பர்கள் இந்த மன்றம் இன்று இரண்டாவது ஆண்டு விழாவை நடத்துவதாகக் கூறினார்கள். காலஞ்சென்ற கலைவாணர் என். எஸ். கே. யின் பெயரால் இம்மன்றம் நல்ல பல பணிகளைச் செய்து வருவதை அறிந்து நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

கலைவாணர் கலை உலகின் மூலம் நல்ல சீர்திருத்தப் பணிகளைச் செய்து வந்தார். அவர் மக்களை சிரிக்கவும் வைத்தார்; சிந்திக்கவும் வைத்தார்.

இந்த நாட்டில் மலிந்துகிடந்த மூடப்பழக்க வழக்கங்களை தனது நடிப்பின் மூலம் எடுத்துரைத்து மக்களை நல்வழியில் கொண்டு செல்ல முற்பட்டார். கலைவாணர் மறைவு தென்னகத்திற்கும், தென்னக மக்களுக்கும் பெரு நஷ்டமாகும். பகுத்தறிவுக் கொள்கைகளை கலையின் மூலம் நல்ல முறையில் பரப்பி வந்த ஒரு பெரும் சீர்திருத்தச் செம்மலை நாம் இழந்துவிட்டோம். அவர் மறைந்தாலும் அவரது பணிகளை இன்று நாம் பின்பற்றி செய்து வருகிறோம். அவரது லட்சியம் நிறைவேறுவதற்காக ஆயிரமாயிரம் இளைஞர்கள் இன்று முன்வந்து அயராது உழைத்து வருகின்றனர்.

இன்று இந்த மாநிலத்தில் காங்கிரஸ் கையாண்டு வருகிற முறைகளைப் பார்க்கின்றபோது நம்முடைய உள்ளமெல்லாம் கொந்தளிக்கின்றது. நம்முடைய அரும்பெரும் தலைவர்களையும் நமது கழகத்தையும் இழித்தும் பழித்தும் வாயால் பேச முடியாத வார்த்தைகளைக் கொண்டு தூற்றியும் வருகிறார்கள். அது மட்டுமல்ல; இன்று பலாத்காரமான முறையில் இறங்கி நம் கழகத் தோழர்களை தாக்கவும் முயன்றிருக்கின்றனர்.

“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்பொருள் காண்பது அறிவு” என்ற வள்ளுவரின் வாசகப்படி யாருடைய கூட்டமானாலும், எந்த கட்சியார் பேசினாலும் அந்த கூட்டங்களுக்குச் சென்று அவர்கள் என்ன பேசுகிறார்கள், நம்மைப்பற்றி என்ன குறை கூறுகிறார்கள் என்பதை அறிய செல்லும் நம் தோழர்களை காலிகளையும், ரௌடிகளையும், கைக்கூலிகளையும் வைத்து அடித்துத் துன்புறுத்துகின்றனர்.

இன்று திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றிருக்கும் வளர்ச்சியைக் கண்டு பொறாமையும், பொச்சரிப்பும் கொண்டு அதை எப்படி அழிப்பது என்ற நோக்கத்தாலேயே இந்த பலாத்காரத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். நான் இன்னும் உங்களிடம் ஒரு விஷயத்தை விளக்க ஆசைப்படுகிறேன். காங்கிரஸ் அமைச்சர்களும், பிரமுகர்களும் முன்கூட்டியே சதித் திட்டம் தயாரித்து இம்மாதிரி விளையாட்டுகளில் ஈடுபட்டிருக்கின்றனர் என்று எண்ணுகிறேன். இரண்டு மாத காலமாகவே என்னுடைய பேட்டையில் இம்மாதிரி பலாத்கார திருவிளையாடல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

நம்முடைய தோழர்கள் காங்கிரஸ் கூட்டங்களில கல்லெறிவதாகவும், கலகம் செய்வதாகவும் வீண் புகார்களைச் செய்து நம்மைத் தாக்குகின்றனர்.

நான் காங்கிரஸ் தலைவர்களுக்கும், அமைச்சர்களுக்கும் ஒன்றை உறுதியாகக் ‘கூறுவேன் “உங்களுடைய கூட்டங்களில் எங்களின் அருமைத் தலைவர் அறிஞர் அண்ணாவைப் பற்றியும், அவரது குடும்பத்தைப் பற்றியும் எவ்வளவு மட்டரகமாகப் பேசி வந்தீர்கள். அன்று நாங்கள் வாளா விருந்தோமே! இன்று மட்டும் ஏன் இந்த சில்லறை விஷயங்களுக்காக கல்லெறிந்து கலகம் செய்யப் போகிறோம். எங்களுடைய அண்ணா எங்களுக்கு கடமையையும், கட்டுப்பாட்டையும், கண்ணியத்தையும் போதித்திருக்கிறார். ஆகவே நாங்கள் ஒரு நாளும் இம்மாதிரியான இழிவு வேலைகளில் ஈடுபட மாட்டோம்.

என்னுடைய பகுதியில் வீடுகளிலும், கடைகளிலும் உட்கார்ந்திருப்பவரை வம்புக்கிழுத்து, சூளை பெத்துநாயக்கன் பேட்டை, வண்ணாரப்பேட்டையில் உள்ள ரௌடிகளை அழைத்து வந்து அடிக்கச் செய்கின்றனர். போலீஸாரும் காலிகளின், ரௌடிகளின் கொட்டத்தை அடக்குவதற்கு பதிலாக நம் தோழர்களை கைது செய்கின்றனர். போலீஸ் அதிகாரிகளுக்கு நான் ஒன்று கூற ஆசைப்படுகிறேன். இன்று காங்கிரஸார் அதிகார வர்க்கத்திலே அமர்ந்திருப்பதைப் போலவே நாளை எங்கள் அண்ணாவும் அதிகாரத்திற்கு வரலாம். ஆகவே நீங்கள் நீதியோடும், நேர்மையோடும் கடமையாற்ற வேண்டும். குற்றம் யார் செய்தாலும் சரி—அது திராவிட முன்னேற்றக் கழகத்தவராக இருந்தாலும் சரி—அதிகாரத்திலே உள்ள காங்கிரஸ்காரர்களாக இருந்தாலும் சரி—உரிய தண்டனை வழங்குவதைப் பற்றி நாங்கள் கவலைப்பட மாட்டோம். போலீஸ் அதிகாரிகள் மக்களின் பாதுகாவலர்

(11ம் பக்கம் பார்க்க)

மகஜர்போட்டு மண்டியிடும் காலம் மலையேறி விட்டது !

இதற்கெல்லாம் முற்றுப் புள்ளி வைக்கவே நாங்கள் வந்துள்ளோம் !

(சம்பத் பேச்சு 9ம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கு நான், நாளும் தென்னகத்தில் பெருகிவரும் உணர்ச்சி வெள்ளத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

'எங்கள் கோரிக்கைகளை நாங்கள் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கும் இந்த நிலைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்தாக வேண்டும்.

'வெறும் மனுப் போடுவதற்காக நாங்கள் அரசியலில் ஈடுபட்டிருக்க விரும்பவில்லை. இந்த மகசர் போடும் அரசியலில் நாங்கள் இருக்கமாட்டோம்; அதனை நாங்கள் கட்டோடு வெறுக்கிறோம்.

'ஒரு விவகாரத்தை எடுத்துச் சொல்லுகிறோம்; ஏற்றுக்கொள்ளுமாறு கேட்கிறோம்; மனுவும் போடுகிறோம்; ஆனால் அவை எல்லாம் குப்பைக் கூடைக்கு அனுப்பப்படுகின்றன.

'இங்குள்ளோரிடம் பழகி அனுபவப்பட்ட திரு. சி. இராசகோபாலாச்சாரியார்கூட, இங்குள்ளோர், ஒரு கோரிக்கைக்காக கிளர்ந்தெழுந்து போராட்டம் நடத்தினாலன்றி, அதனைக் கவனிக்கமாட்டார்கள்; அந்த அளவு அவர்களது தோல் தடித்துவிட்டது' என்று கூறியிருக்கிறார் !

'தூத்துக்குடித் துறைமுகத் திட்டம் வேண்டுமானால், உரத் தொழிற்சாலை அமைத்துக் கொள்ள வேண்டுமானால், உருக்கு ஆலை அமையவேண்டுமானால் நாங்கள் போராட்டம் தான் நடத்தவேண்டுமென்றால், நாட்டின் நிலை என்ன ஆகும் ? இந்த நிலையே நீடித்தால், மக்களுக்கு என்ன கதிதான் நேரும்? அதையெல்லாம்விட, இன்று சர்க்காரிலிருப்போரின் கதி என்னவாகும் ?

'தென்னகத்தைப் புறக்கணிக்கும் இந்தப் போக்கிற்கு உடனடியாக முடிவு கண்டாக வேண்டும்; எங்களது நியாயமான கோரிக்கைகள் பரிசீலக்கப்பட்டு ஏற்கப்பட்டாக வேண்டும்.

"இறுதியாக நான் ஒன்று சொல்வேன்—தென்னக மக்கள் பொறுமை இழந்து விட்டார்கள். தங்களுடைய கோரிக்கைகள் இவ்விதம் அலட்சியப் படுத்தப்படுவதையும், மொழிப் பிரச்சினையில் காட்டப்படும் ஆதிக்க நோக்குடைய அவமதிப்பையும் தென்னக மக்கள் இனியும் தாங்கிக் கொள்ளப் போவதில்லை' என்று இங்குள்ளோருக்கு எச்சரிக்க விரும்புகிறேன்."

நாடு காக்கும் தீரர்

எங்கள் நாராயணசாமி !

⊕⊕⊕

தஞ்சை மாவட்டத்திற்கு மன்னார்குடி நாராயணசாமி செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்! மன்னார்குடி நாராயணசாமி நீண்ட நாள் சுயமரியாதைக்காரர். பெரியார் காலந்தொட்டு பணிபுரிந்து வருபவர். அவருக்கு இந்த பொறுப்பு கிடைத்தது மிக்க மகிழ்ச்சி யூட்டும் செய்தியே யாகும்!

அவருடைய இதயத்தில் அழியாத ஓவியமாக இருப்பது நமது இலட்சியம்—அவரது உள்ளத்திலே ஊன்றிக் கிடப்பது நமது மாசு மருவில்லா கொள்கை! எனவே அவர் செய்ய வேண்டிய பணிகளைப் பற்றி நாம் அதிகம் சொல்லத் தேவையில்லை!

சட்ட மன்றத்திலே நமது இலட்சிய முழக்கத்தை ஒலிக்க திராவிடத்தின் குரலை எழுப்ப தஞ்சை மாவட்டம் இதுகாறும் எந்த ஒரு வீரரையும் அனுப்பிவைக்கவில்லை! சுயமரியாதைக் கோட்டை என்று புகழ்பெற்ற தஞ்சை மாவட்டத்திற்கு இது பெரும் இழுக்கு என்பதை புதிய செயலாளர் உணர்ந்து பணிபுரிய வேண்டும்.

இடையிலே கொஞ்சம் துவண்டுக் கிடந்த தஞ்சை மாவட்டம் மீண்டும் துடித்தெழுந்திருப்பதைக் கண்டோம் ! இந்த எழுச்சியை வளர்த்து மேலும் விழிப்பை உண்டாக்கி திராவிடத்தின் புகழை நிலை நாட்டவேண்டும்!

உங்களுக்கு உற்ற துணைவர்களாக கிடைத்திருப்பவர்கள் அனைவரும் மிக்க அனுபவம் பெற்றவர்கள்; பொறுப்புள்ளவர்கள், செயல் வீரர்கள்! அவர்களுக்கு மேலும் மேலும் உற்சாகத்தை அளித்து காரியமாற்ற வேண்டும்.

உங்களுக்குக் கிடைத்திருக்கிற துணைச் செயலாளர் கிட்டப்பா மிக்க சுறுசுறுப்பானவர், நல்ல செயல் வீரர்; அவர் உங்கள் பணியை பகிர்ந்துகொள்வார் என்பதில் சந்தேகமில்லை !

இன்னும் சொல்லப்போனால் உங்களுக்குப் பெரும் பெரும் தலைவர்களும் கிடைத்திருக்கிறார்கள் கலைஞர் கருணாநிதி, என். எஸ். இளங்கோ, டி. கே. சீனிவாசன் போன்ற தலைவர்களின் பெரும் துணையும் உங்களுக்கு இருக்கிறது.

சென்ற தேர்தலில் நமக்குக் கிடைத்த மாசு அகற்றப்பட வேண்டும்! இதுதான் முதல் பணியாக இருக்கவேண்டும். முக்கிய பணியாக இருக்கவேண்டும். இவைகளைச் செய்ய வேண்டும் என வேண்டி உங்களைப் பாராட்டுகிறோம்!

துணைச் செயலாளர் பதவியை ஏற்றிருக்கும் கிட்டப்பாவையும், பொருளாளர் தங்கவேலுவையும், அவைத்தலைவர் சுப்பிரமணியத்தையும் நாங்கள் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்!

பொதுக்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் கலைஞர் கருணாநிதி, டி கே சீனிவாசன், என். எஸ். இளங்கோ, நாகூர் அனிபா, எஸ். டி. சோமசுந்தரம், மேக்கிரிமங்கலம் மணி, குடவாசல் கிருஷ்ணமூர்த்தி, நாகை கே. வி. ராமன், பி. எஸ். தங்கம், காரைக்கால் சலியே, ஆகிய பத்து செயல் வீரர்களையும் பாராட்டிப் பணிபுரிய வேண்டுகிறோம்.

தஞ்சையின் புகழ் தமிழகமெங்கும் மணக்கவேண்டும் !

மணிவண்ணன் பேச்சு
(10ம் பக்கத் தொடர்ச்சி)

களாவார். மக்களை செவ்வனே பாதுகாக்க வேண்டியவர்கள்! அடபடிப்பட்டவர்கள் அடிப்பவனை விட்டுவிட்டு அடிபடுகின்றவனை கைது செய்வது நீதியாகுமா ? நேர்மையாகுமா ? சில நேரங்களில் காலிகளும் ரௌடிகளும் நம் தோழர்களை அடித்துவிட்டு ஓடுவதை பார்த்துக்கொண்டு இருந்தும் அவர்களை பிடிப்பதற்கு முயற்சிக்காமல் விட்டு விடுவதையும், ஓடிவிட்டான் என்று கூறி சமாதானப் படுத்துவதையும் நான் அறிந்திருக்கிறேன். இந்த நிலை இனியும் சென்னையில் நீடிக்குமானால் இங்கு மிகப் பயங்கரமான நிலை நிலவும், நிலவுதற்கான சந்தர்ப்ப சூழ்நிலை எழும்பும் என்பதை அதிகாரிகளுக்கு தெரிவிக்க ஆசைப்படுகிறேன். நாங்கள் என்றும் பலாத்காரத்தில் ஈடுபடமாட்டோம் என்பதை உங்களுக்கு தெளிவாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். எங்களது ஜீவாதார லட்சியம் திராவிட நாடு விடுதலை பெறுவதே! இந்த நாட்டில் உள்ள ஏழை மக்கள் நல்வாழ்வு காண வேண்டுமென்றே நாங்கள் போராடி வருகிறோம். அப்படிப்பட்ட எங்களிடம் கூலிப் பட்டாளங்களையும் ரௌடிகளையும், கள்ளச் சாராயம் விற்பவர்களையும் ஏவிவிட்டு இன்னல் விளைவிக்கிறார்கள். கலகம் செய்பவனை பிடித்துக் கொடுத்தாலும் அதிகாரிகள் விசாரணை செய்வதில்லை.

இந்த மாதிரியான காரியங்களை வேண்டுமென்றே, முன் கூட்டியே முன்னெச்சரிக்கையுடன் செய்து வருகின்றார்கள். நமது தோழர்களைத் தாக்கும் போது மேடைமேலிருக்கிற மின்சார விளக்குகளை அணைத்து விடுகின்றனர். அந்த சமயத்தில் நாம் போலீஸாரிடம் முறையிட்டால் போலீஸார் பாராமுகமாகவே இருந்து வருகின்றனர்

இன்று தமிழ் நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருக்கும்

(12ம் பக்கம் பார்க்க)

Registered as a Newspaper in CEYLON

இலங்கையில் 20 சதம்

Regd.No.M. 7074 **MALAIMANI** விலை 16 காசு **Phone 83285**

கட்டபொம்மனைக் காட்டிக் கொடுத்த எட்டப்பன் இனி இங்கு வேண்டாம்!

கோட்டைவாசிகள் எட்டுபேரும் அந்த பட்டியலில் சேரவேண்டாம்!

மனோகரன் பேச்சு

(8ம் பக்கத் தொடர்ச்சி

கலங்கவில்லை; நம் கழகம் அழிந்து படவில்லை. அதற்கு மாறாக நமது திராவிட முன்னேற்றக் கழகம் வளர்பிறை போல் வளர்ந்து வருகிறது. நமது பொதுச் செயலாளர் நாவலர் அடிக்கடி கூறுவதுபோல் அடிக்க அடிக்க பந்து உயர உயர செல்வதுபோல் நமது கழகம் இன்னல்களை அனுபவிக்க அனுபவிக்க மாற்றார் அஞ்சும் வகையில் வளர்கிறது.

இன்று ஆட்சி நடத்தும் துரைத்தனத்தார் நம்மை எப்படியாவது 1962ம் ஆண்டு வரும் பொதுத் தேர்தலுக்குள் அழித்து விடலாமென்று எண்ணுகின்றனர். அதற்காகவே காட்டுத்தனமான முறையில் நடந்து வரவும் முற்பட்டுவிட்டனர். மக்களின் சக்தியைப் பெற்று காங்கிரஸ் செல்வாக்கைப் பெறுவதற்குப் பதிலாக அராஜக ரீதியில் வளர்ந்து தன்னை அழித்துக் கொள்கிறது.

இந்த நாட்டிலே உள்ள மக்களின் உணர்ச்சிகளையும், எண்ணங்களையும் மறைத்து வைக்க வடநாட்டினருக்கு கங்காணிகளாக இங்கே எட்டு எட்டப்பர்கள் இருக்கிறார்கள். அன்று ஒரு கட்டபொம்மனை ஒரு எட்டப்பன் காட்டிக் கொடுத்ததாக வரலாறு பேசுகிறது. இன்று தமிழ் மக்களை...இங்கே எட்டு எட்டப்பர்கள் காட்டிக் கொடுக்கின்றனர். இது நீண்ட நாள் நிலைத்திருக்காது! மக்களின் உணர்ச்சி பெருகி விட்டது! உரிமை வேட்கை மிகுந்து விட்டது...!

நான் நீண்ட நேரம் உங்களிடம் பேச முடியாது. அதாவது அரசாங்கம் 'ரேஷன்' அதற்கும் விதித்திருக்கிறது; 9 மணிவரைதான் பேசஅனுமதி வழங்கி இருக்கிறது; இந்த ஆட்சியில் பேசுவதற்குக் கூட உரிமை கிடையாது.

இன்றைய ஆட்சியின்மீது மக்கள் மிகுந்த வெறுப்படைந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு இன்று ஏராளமான இன்னல்கள் மலிந்து கிடக்கின்றன.

இன்று மக்கள் தாராளமாக நூறு ரூபாய்க்கு சில்லறை மாற்ற உரிமைகூட கிடையாது. நோட்டுகள் சந்தேகத்திற்குரியனவாயின. எந்த நோட்டு செல்லும்; எந்த நோட்டு செல்லாது என்ற மனக் குழப்பம் இன்று மக்களிடையே நிலவி வருகிறது. (Reserve Bank) கவர்னர் கையெழுத்திட்ட நோட்டையே சந்தேகப்படக் கூடிய அளவுக்கு இந்த நாட்டு மக்களிடையே குழப்பம் அதிகரித்துவிட்டது. இது சம்பந்தமாக வழக்கு மன்றத்தில் பிரச்சினை செய்யப்படுவதால் நான் அதிகமாகப் பேசவிரும்பவில்லை; ஆனாலும் கள்ளநோட்டு பற்றிய குழப்பம் எங்கும் பரவி விட்டது. இதை ஆட்சியாளர்கள் எந்த முறையில் மாற்றப் போகின்றனர் என்று தெரியவில்லை. நாம் நமது மூலாதார லட்சியமான திராவிடநாட்டைப் பெறுவதற்காக எந்த விதமான இன்னல்கள் வந்தாலும் அதை ஏற்று இன்பத் திராவிடத்தை அடைய நாம் பாடுபட வேண்டும். டெல்லி அரசாங்கத்தின் வரலாறே உதைத்தவனுக்கு குனிந்து கொடுக்கும் பான்மையில்தான் இருக்கிறது.

1947லிருந்து 60 வரை சரித்திரத்தைப் பார்ப்போமேயானால் நியாயமான முறையில் கேட்டு நேர்மையான முறையில் பேசி எந்த உரிமையையும் பெற்றதாகத் தெரியவில்லை. இன்றைய டெல்லி மன்னர்கள் உதைபட்டபின்புதான் உணர ஆரம்பிக்கிறார்கள்.

காலம்சென்ற காயதே ஹஸம் முகமது அலி ஜின்னா பாக்கிஸ்தான் கேட்டார். அதை காங்கிரஸார் மறுத்தனர். வரலாற்றுச் சான்றுகளையும் இன்னபிற விளக்கங்களையும் கூறி ஜின்னா கேட்டுப் பார்த்தார். ஆனால் பண்டித நேருவும், காங்கிரஸ் தலைவர்களும் கேலியும் கிண்டலும் செய்தனர். 'மயிலே மயிலே இறகு போடு' என்றால் போடுமா? நவகாளி நிகழ்ந்த உடன் சுதந்திர பாக்கிஸ்தான், 1947-ல் மலர்ந்தது.

காங்கிரஸ் தீர்மானத்தின்படி மொழி வழியாக ஆந்திர மாநிலம் வேண்டுமென்று கேட்டனர். பல காங்கிரஸ் மாநாடுகளின் தீர்மானங்களை ஆதாரம் காட்டி கேட்டனர். இதை மறுத்து அவர்களை கேலியும் கிண்டலும் செய்தனர், ஆந்திர மக்கள் விடுதலை வேட்கை கொண்டு சங்கநாதம் முழங்கினர்; மறுகணம் ஒரு பொட்டி ஸ்ரீராமுலு பிணமானார். ஆந்திரமெங்கும் கலவரங்களும், குழப்பமும் சூழ்ந்தது. கேலி செய்த நேருபிரான் கீழே இறங்கினார். ஆந்திர மாநிலம் சுதந்திரமாகி மலர்ந்தது.

பம்பாய் மாநிலத்தை இரண்டாகப் பிரித்து மராட்டிய மண்டலமும், குஜராத்தி மாநிலமும் அமைய வேண்டுமென்று போராடினர். அகில உலகப் புகழ்பெற்ற அலகாபாத்தார் பொங்கி எழுந்தது, அவர்கள் கோரிக்கைக்கு இணங்க முடியாது என்று மறுத்ததுடன் அவர்களை இழிவாக இறுமாப்பு கொண்டு பேசினார். மக்களின் உணர்ச்சி விரிட்டெழுந்தது. மொழிப்பற்றும், தேசப்பற்றும் மிக வேகமாக பூத்தது; இறுமாப்பு கொண்ட நேருவின் ஆணவப் பேச்சால் அங்கே அராஜகம் தலைப்பட்டது. வடநாட்டு ஏகாதிபத்திய நேரு அங்கே ஓடினார்; அவர்களைப் பயமுறுத்தினார்; ராணுவத்தையும், அதிகாரத்தையும் கொண்டு உங்களை அடக்குவேன் என்று கர்ஜனை செய்தார். நேரு பேசவிருந்த கூட்டத்தில் பேசமுடியாது தத்தளித்து டெல்லி திரும்பினார். பின் என்ன நடந்தது? குஜராத்தி மண்டலமும், மராட்டிய மாநிலமும் பிரிவதை எதிர்த்த நேருவே பம்பாய்க்கு ஓடோடி வந்து ஆரம்பித்து வைத்தார். இரு மாநிலங்களும் தனித்திருக்க வேண்டிய அவசியத்தை வரவேற்றார் சான்றுகளுடன் ஆதரித்துப் பேசினார். இது எப்படி நடந்தது? உதை விழுந்த பின்புதான் ஆட்சியிலுள்ளவர்களுக்கு உணர்வு வந்தது!

அதே போன்றே நாகர்களும் தனித்து இருக்க வேண்டும் என்றும் தங்களுக்கு நாகநாடு வேண்டும் என்றும் கேட்டார்கள். பிரதமர் நேரு துள்ளி எழுந்து பேசினார். "நாகநாடு கிடையாது. நாகர்களுக்கு அந்த உரிமை கிடையாது; நான் ஒரு நாளும் நாகநாடு பிரிவதை அனுமதிக்க மாட்டேன் என்று ஆணவமாக மொழிந்தார். நாகர்களின் ஒப்பற்ற தலைவரான "பிசோ" நாங்கள் தனிநாட்டைப் பெற்றே தீருவோம்! அதை எவராலும் தடுக்க முடியாது! என்று கர்ஜனை புரிந்தார். அங்கே நாகர்களின் கிளர்ச்சிப் புயல் விம்மி எழுந்தது. டெல்லி ஆட்சியாளர்களின் படை பலத்தை, அதை அடக்க அனுப்பப்பட்டது. டெல்லியிலிருந்து 5000 துருப்புக்கள் அனுப்பப்பட்டால் 2000 துருப்புக்கள் தான் திரும்பிவரும். 3000 துருப்புக்கள் என்னவாயிற்று என்றே தெரியாது. இந்த நிலை நீடித்த பின்பு பிசோவை எப்படியும் கைது செய்ய வேண்டுமென்று பெரு முயற்சி செய்தனர். அவரைக் கண்டு பிடித்துத் தந்தால் பரிசுகள் தரப்படும் என்று அறிவிக்கப்பட்டது. பிசோ மலைபடிவாரத்தில் ஒளிந்திருப்பதாகவும், அவனைப் பிடிக்க ராணுவங்களை அனுப்பப் போவதாகவும் செய்திகள் பறந்து கொண்டிருந்தன. ஆனால் திடீரென்று ஒரு செய்தி வெளி வந்தது. அந்தச் செய்தியைக் கேட்டவுடன் டெல்லி அரசாங்கமே கலகலக்க ஆரம்பித்தது—செங்கோட்டை அதிர ஆரம்பித்தது! அந்தச் செய்தி தான் 'பிசோ' லண்டனில் இருக்கிறார் என்ற செய்தி! இதைக் கேட்ட நாகர்கள் குதூகலமடைந்தனர். அவர்களிடையே புரட்சி உணர்வு எழ ஆரம்பித்தது. எங்கும் "நாக நாடு" வேண்டுமென்ற பண் ஒலிக்க ஆரம்பித்தது. கலைவாணர்கள் தங்கள் கலையின் மூலம் நாக

[7-ம் பக்கம் பார்க்க]

மணிவண்ணன் பேச்சு

(11ம் பக்க தொடர்ச்சி)

ஓ. வி. அளகேசன், சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி தலைவர் இராமதாஸ் ஆகியவர்கள் முன்கூட்டியே திட்டமிட்டு இம் மாதிரியான சதிவேலைகளில் கைக்கூலிப் பட்டாளங்களை ஏவ விட்டிருக்கின்றனர் என்பதை அவர்களின் பேச்சிலிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது. இருப்பினும், நாங்கள் எங்கள் லட்சியத்திலிருந்தும், கடமையிலிருந்தும் ஒரு சிறிதும் தவறமாட்டோம். எங்களண்ணா எங்களுக்குக் கொடுத்திருக்கிற அறிவுரையான 'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்' என்ற பொன் எழுத்துகளை நாங்கள் என்றும் மறக்க மாட்டோம். நான் இந்த நெருக்கடியான நேரத்தில் மாவட்டச் செயலாளராக வந்திருக்கிறேன் உங்களுடைய அன்பையும் ஆதரவையும் பெற்று நல்ல பல பணிகளை செவ்வனே செய்வேன் என்றுட் உறுதி கூறுகிறேன்.

கடைசியாக அதிகாரிகளுக்கும் ஒன்றை கூறிமுடிக்க ஆசைப்படுகிறேன்: இந்த நகரில் பலாத்காரச் செயல்களும், காலித்தனங்களும் எவர் செய்தாலும் எந்த கட்சியாக இருந்தாலும் அவர்களை கடுமையாக தண்டித்து நகரில் அமைதியை நிலவச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற சில தினங்களுக்கு முன்பு எனது பேட்டையில் அடிபட்ட லிங்கபூஷணம், திருநாவுக்கரசு ஆகிய இரு கழகத் தோழர்களும் இங்கே வந்துள்ளனர். அவர்களை மிகக் கடுமையாக மாற்று கட்சியினர் தாக்கியுள்ளனர்: இது சம்பந்தமாக அதிகாரிகளிடம் புகார் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அதிகாரிகள் அடித்தவர்களின் மீது இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை! ஆகவே பொறுத்திருந்து கவனிப்போம்.

இந்த மன்றத்தில் எனக்கு பேச வாய்ப்பளித்ததற்கு எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு உங்களிடமிருந்து விடை பெறுகிறேன் வணக்கம்.

ஆசிரியரும், 'வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி.எஸ். இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ்,
404 திருவல்லிக்கேணிஹைரோடு, சென்னை-5 அலுவலகம்: 1-35, வாணியர் தெரு, சென்னை-14.